# தேசத்தின் குரல்



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தேசத்தின் குரல்
# கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

மழலைக் குரலாக
04. 03. 1938

தேசத்தின் குரலாக
14. 12. 2006

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேன் தமிழீழ தேசத்தின் குரலே!
ஆன்ற நுண்ணறிவுடை நல்மதி யுரைஞனே!
தோன்றிடு தாயகச் சுடர் எழும் போது
நீ விழி மூடிய செய்தியோர் கொடுமையே...!

உண்மையை உரைத்த உன் திரு நாவும்
உலகினை ஈர்த்த உன் பேனாவும்
கண்களில் எரிந்த விடுதலைத் தீயும்
எங்களுள் மீண்டும் எழுவது உறுதியே...!



**Alexandra Palace**
**London**

**20.12.2006**



தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்
2006-12-14

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்ட எமது தேசத்தின் ஒளிவிளக்கு இன்று அணைந்துவிட்டது. ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலாண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரமல்ல தமிழீழ தேசத்திற்கே இட்டுநிரப்பமுடியாத பேரிழப்பு.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலமாக மனிதவாழ்வு நிலைக்கிறது. இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக, ஒத்ததாக, ஒருசீராக அமைவதில்லை. காலச்சீரற்றதாக ஒருவருக்குக் கூடி, மற்றவருக்குக் குறுகி, இன்னொருவருக்கு அதிகம் நெடுத்து கூடிக்குறைந்து செல்கிறது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

துரதிஷ்டவசமாக, பாலாண்ணையின் வாழ்வு இடைநடுவில் நின்றுபோய்விட்டது. தீவிரம்பெற்றுள்ள எமது விடுதலைப்போருக்கு அவர் நிறையப் பணிகளை ஆற்றவேண்டியிருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. என் உள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது. கட்டுக்கடங்காத காட்டாறு போல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்டமுடியாது. மனித மொழியில் இதற்கு இடமுமில்லை.

பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம்புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது. அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுகள் பிணைந்துகொண்டு, எமது உறவு நல்லுறவாக வளர்ந்து நட்புறவாகப் பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்றுபட்ட மனிதர்களின் சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது. தினந்தினம் நாம் பகிர்ந்துகொண்ட வாழ்பனுபவத்தில் வலிமைபெற்று வளர்ந்தது.

சாதாரண மனித உறவுகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அபூர்வமான இலட்சிய உறவு அது. பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினந்தினம் சாவோடு போராடியபோதும் தாங்கமுடியாத உடல் உபாதைகளால் வருத்தியபோதும், தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்டபோதெல்லாம் எனது ஆன்மாவைக் கலக்கியுள்ளது. எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலாண்ணைக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது. ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனைகளும் ஆறுதலும் தந்தவர். எனது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, எனது பளுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும் வேதனைகளையும் சவால்களையும் சங்கடங்களையும் தாங்கிக்கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னணியில் நின்று செயற்பட்டவர். ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேசத்தின் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பாலாண்ணையின் மாபெரும் போராட்டப்பணிக்கு மதிப்பளித்து "தேசத்தின் குரல்" என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். பாலாண்ணை உண்மையில் எம்மைவிட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவலைகளில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

Head Quarters
Liberation Tigers of Tamil Eelam
Tamil Eelam

A source of unwavering strength in the political and diplomatic efforts of our freedom movement, and the light of our nation is extinguished. Bala Annai, from whom I sought advice and solace, is no more with us. It is an irreplaceable loss for our entire nation and for me.

Bala Annai's life has been much too short. His death comes at a time when we needed him most, as our freedom struggle intensifies. I cannot find words to express my grief and loss.

From the beginning of our struggle, when we first met, there was a deep mutual understanding. The fondness that rose from that understanding developed into a rare friendship. We thought and acted in unison. Our friendship grew in strength through our shared day-to-day experiences. This friendship stands apart from ordinary human relationships. It matured with time and was shaped by our shared history.

I was deeply fond of Bala Annai. In the great family that is our movement he was its eldest son and its guiding star for three decades. That is how I looked up to him. During the time we lived together as one family, I came to realize that he was no ordinary human being. He was strong and unshakable even during the illness that threatened to take his life and the severe pain that illness brought him. The strength of his soul was inspirational. I grieve for him.

Bala Annai has a permanent historic place in the growth and the spread of our movement. He was its elder member, its ideologue, its philosopher and, above all, my best friend who gave me encouragement and energy. He shared my sorrows, my anxieties and my travails. He was with me from the very beginning of our movement, sharing its challenges and hardships. He was the central figure in all our diplomatic efforts.

Saluting the immeasurable service he rendered our nation in the political and diplomatic arenas and the efforts by which he put our national freedom movement on the world stage, allowing our nation to stand with dignity, I am proud to bestow the title of 'Voice of the Nation' on Bala Annai. Bala Annai has not left us. He will live permanently in our thoughts.

The yearning of the Tigers is Tamileelam!

V. Pirapaharan
Leader
Liberation Tigers of Tamil Eelam



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# நெருப்புக் குன்றம்

மூத்தவர் புலிகளின் தானையில்
முளைத்தவர் மானத்தைத்
தமிழர் மூச்சில்
கோத்தவர் புலிப்படை தழைத்தெழ
அறிவொளி கொடுத்தவர்
பாலசிங்கம்!

காத்தவர் புலிகளை வளர்த்தவர்
களப் போரில் வெற்றிகள்
கண்டு நெஞ்சம்
பூத்தவர் மலை வீழ்ந்ததென வீழ்ந்தார்!
தமிழீழம் வெறிகொண்டு
புலம்புதம்மா!

சண்டையில் எதிரியின் செவிதாக்கும்
தேசியத் தலைவரின்
களப்போர்ச் சங்கம்!
குண்டுகள் இடை நின்று தமிழீழம்
உயிர் மீளக் கனல்கொட்டும்
நெருப்புக் குன்றம்!

மண்டையில் வஞ்சனை சுமந்த போர்
வெறிப்பகை துகள் செய்யும்
புயலின் வீச்சம்!
உண்டு மண் விடுதலை என நாங்கள்
நிமிரும் நாள் கண்மூடி
ஓய்ந்ததென்ன ?

கண்களெல்லாம் நீராக நெஞ்செல்லாம்
கனலாக வெடிக்கின்றோம்!
கதறுகின்றோம்!
மண்காத்தவன் போரில் தமிழ் மக்கள்
மானத்தைக் காத்தவன்
மறைந்தான் கண்டீர்!

உண்மையின் குரலொன்றைக் காற்றினில்
கரைத்து நாம் உளங்களைந்
துருகின்றோம்..
அண்ணா அண்ணா என்று கதறிடும்
புலிகளின் துயரை யார்
ஆற்றுவாரோ ?

- காசி ஆனந்தன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தன்னை வருத்திய நோயினும் கொடியது ஈழத்தமிழர் துயரம் என எண்ணி வாடியவரும், உலகத் தமிழர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவரும், இலங்கையில் அமைதி நிலைத்திட விரும்பிச் செயற்பட்ட நம்போன்றோருடனும், நோர்வே நாட்டினருடனும் நட்புறவு கொண்டு நாளும் உழைத்தவரும், அறிவில் சிறந்தவரும், ஆற்றலாளரும், அன்பின் உருவமாகத் திகழ்ந்தவரும், இறுதியாக இமைக்கதவுகள் மூடும் வரையில் ஈழத்தின் சுயமரியாதைச் சுடரொளியை அணையாமல் பாதுகாத்தவரும் என்னரும் நண்பர் பாலசிங்கம்.

அவரது மறைவுச் செய்தியை பலகாலம் அவருடன் பழகிய என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரை இழந்து தவிக்கும் நண்பர்களுக்கும், அவரது அன்புத் துணைவியாருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர்
மு.கருணாநிதி
தமிழக முதல்வர்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மறைந்தார் என்ற செய்தி இதயத்தில் வேலாகப் பாய்ந்தது.

துன்பமும், துயரமும் நிறைந்த ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றில் பாலசிங்கம் அவர்கள் ஆற்றியுள்ள சேவை இமயம் நிகர்த்தது. மார்க்சீய சிந்தனையும் மனிதகுல வரலாற்றில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களின் ஞானமும் தொலைநோக்கோடு பிரச்சனைகளை ஆராய்ந்து அணுகும் மதிநுட்பமும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பெற்றிருந்த அற்புதமான எழுத்து ஆற்றலும் எவரும் எதிர்கொள்ள முடியாத வாதத்திறமையும் தமிழீழத் தாயக விடுதலைக்கான அர்ப்பணிப்பும் மலைபோன்ற துன்பங்களையும் சலிக்காது தாங்கும் மனவலிமையும் ஒருங்கே நிறைந்த சாலக்கருவூலமாக, தமிழீழத்தின் அருட்கொடையாக திகழ்ந்த மாமனிதர்தான் அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குப் பெருந்துணையாக விளங்கிய பாலசிங்கம், தமிழ் இனப் படுகொலை நடத்தும் சிங்கள இனவாத அரசு உலகெங்கும் மேற்கொண்ட பொய்ப்பிரச்சாரத்தை முறியடித்து சர்வதேச சமுதாயத்தின் மனச்சாட்சியை விழிக்கச்செய்தார். 85 இல் திம்பு முதல் 2006 ஜெனீவா வரை 21 ஆண்டுகள் தமிழீழத்தின் உரிமைக்குரலாக விளங்கினார். மரணம் பலமுறை அவரை முற்றுகையிட்டது. 86 இல் சென்னையிலேயே அவரைக் கொலை செய்ய சிங்களக் கைக்கூலிகள் முயன்றனர். 87 - 88 களில் ஈழத்தில் இராணுவத் தாக்குதலில் பலமுறை மயிரிழையில் உயிர் தப்பினார். இரு சிறுநீரகங்களும் முற்றிலும் பழுதான நிலையில் நோர்வே அரசு அவரைப் பாதுகாத்து, சிகிச்சை அளித்து உயிரைக் காப்பாற்றியது. அவுஸ்திரேலியாவில் பிறந்த இலட்சிய வீராங்கனையான அடேல் அவர்கள் பாலசிங்கத்தின் துணைவி ஆனார். மார்க் ஜென்னியைப்போல் இருவரும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர். எண்பதுகள் முதல் பாலசிங்கம் அவர்களிடம் நான் கொண்ட நட்பும் பாசமும் எத்தனையோ முறை நான் கணக்கில உளமாற மகிழ்ந்ததும். அதிலும் குறிப்பாக 2000 ஆம் ஆண்டு ஜூனில் இரண்டு நாள் வன்னியில் அவரோடு தங்கியபோது பரிமாறிக்கொண்ட அவரது அனுபவச் செய்திகளும் என் நெஞ்சிருக்கும் வரை நிலைத்து இருக்கும். ஈழத்தின் நூர் குறித்து கவலை மோதும் போதெல்லாம் அவரிடம் நான் பகிர்ந்து கொள்ளும் பேற்றினையும் காலன் பறித்து விட்டானே! போர் மேகங்கள் ஈழத்தில் சூழ்ந்துவிட்ட நிலையில் தமிழீழ விடுதலைப் பயணத்தின் மிக முக்கியமான காலகட்டத்தில் எங்கள் விடுதலைக் குயிலை மரணக்கழுகு கொத்திப் பறித்துவிட்டதே! இறுதி மூச்சு அடங்கும் வரையிலும் தமிழ் ஈழத்துக்காகவே துடித்துக் கொண்டு இருந்த நல்லுயிர் அடங்கிவிட்டதே! நோயின் கொடுமையால் துன்புற்று நலிந்த அந்த வீரச்சேநான அமைதியாக இனித் தூங்கட்டும். தமிழ் இனம் தன் பொக்கிசத்தை இழந்தது. தமிழீழம் தன் வீரமகனை இழந்தது. ஈழத் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சகோதரி அடேல் பாலசிங்கம் அவர்களுக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் எங்கள் இதயத்து விம்மல்களையும் பொங்கிவரும் கண்ணீரையும் காணிக்கை ஆக்குவதுடன், பாலசிங்கத்தின் இதய தாகமான தமிழீழம் மலரப் பாடுபடச் சூளுரைக்கிறோம் என்பதைத் தெரிவிக்கிறேன்.

வைகோ
ம.தி.மு.க



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நம்பிக்கைக்குரிய தோழருமான பேராசிரியர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தொடக்கம் முதல் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு தன்னலமற்ற தொண்டு புரிந்தவர் அவர். விடுதலைப் புலிகளின் சார்பில் அனைத்து சமரசப் பேச்சுக்களிலும் கலந்து கொண்டு ஈழத் தமிழர்களுக்காக உறுதியாக வாதாடியவர். அவரின் மறைவின் மூலம் உருவான வெற்றிடத்தை யாராலும் இட்டு நிரப்ப முடியாது.

கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட காலத்திலும் கொஞ்சமும் கலங்காது இறுதி மூச்சு வரை கடமையாற்றியவர் அவர். அவருடைய மறைவினால் வருந்தும் அவருடைய துணைவியார் திருமதி. அடேல் அம்மையார் அவர்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழ. நெடுமாறன்
தமிழர் தேசிய இயக்கம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



அது தனியொரு மனிதரின் குரல் அல்ல. தமிழீழத் தேசியத்தின் ஒட்டு மொத்தக் குரல். தமிழீழத் தேசத்தின் குரல். மாமனிதர் அன்ரன் பாலசிங்கம் ஒருவர் பேசினால் எம் தேசமே பேசியதாகும். ஒரு தேசிய இனத்தின் குரலாய், தமிழீழ தேசத்தின் குரலாய் உலக அரங்கில் ஒரு குரல் ஓங்கி உரத்து ஒலித்தது என்றால், அதுதான் பாலா அண்ணையின் போர்க்குரல். தமிழீழ மக்களின் விடுதலைக் குரல். அந்தக் குரல் என்றென்றும் தமிழீழத்தை வென்றெடுக்கும் குரலாய் உலகின் எட்டுத்திக்கிலும் ஓங்கி ஒலித்துக் கொண்டேயிருக்கும். பாலாண்ணை எம்மை விட்டு மறைந்தாலும் அவரின் நெருப்புக் குரல் எம்மையும்; எமது விடுதலைப் போராட்டத்தையும் நீர்த்துப் போகவிடாமல் சூடேற்றிக்கொண்டேயிருக்கும். இலக்கை நோக்கி வீரியம் குன்றாமல் வெற்றிகரமாய் வழிநடத்திக் கொண்டேயிருக்கும். இத்தகைய ஆழ்ந்த புரிதலின் அடிப்படையில்தான் பாலாண்ணை மறைந்த செய்தி கேட்டதும் கலங்கியும் வேதனையோடும் கனத்த நெஞ்சோடும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள், அவர் எம் 'தேசத்தின் குரல்' என்று அறிவிப்புச் செய்திருக்கிறார்.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பாலண்ணாவின் திருவுடல் செயற்படும் இயக்க ஆற்றலை இழந்திருக்கலாம். ஆனால் அவரின் இனமான எழுச்சிக்குரல் எம்மை இயக்கும் ஆற்றலை இழந்துவிடவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில்தான் பாலண்ணா மறைந்ததும் அவரை தேசத்தின் குரல் என்று தமிழீழத் தேசியத் தலைவர் போற்றியிருக்கிறார். பாலண்ணா ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல என்று மெய்சிலிர்த்துப் பெருமையடைகிறார். சாவு இயற்கையானதுதான் என்றாலும், மனித வாழ்வில் தவிர்க்கவே முடியாதது என்றாலும், தமிழீழத் தேசியத் தலைவரால் பாலண்ணாவின் சாவை ஏற்றுக் கொள்ள முடியவில்லையென்று மறுதலிக்கிறார். இயற்கையின் போக்கையே எதிர்க்கிறார்.

பாலண்ணாவின் இருப்பு எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் ஈழ விடுதலைப் போர் மேலும் தீவிரமடைந்து வரும் வேளையில் அவரது பங்களிப்பு எத்தகைய தேவையுடையதாக இருக்கிறது என்பதையும் தமிழீழத் தேசியத் தலைவரின் கண்ணீர்ச் சொற்களில் காணமுடிகிறது. பாலண்ணாவின் மரணம் தனது உள்ளத்தை உடைத்து நெஞ்சத்தைப் பிளப்பதாகத் துடிக்கும் அண்ணன் பிரபாகரன் அவர்கள், தனக்குள் சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தைச் சொற்களால் சுருக்கிச் சொல்லமுடியாது என்று பதைக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாகத் தாம் உணரும் வெறுமையை, வேதனையை, துக்கத்தை, துயரத்தை வெளிப்படுத்தும் வலிமை 'மனிதமொழிக்கு இல்லை' என்றும் துடிக்கிறார். தமிழீழத் தேசியத் தலைவரின் இத்தகைய நெஞ்சை உருக்கும் கொடிய வேதனைகளின் வெளிப்பாடுகளிலிருந்து பாலண்ணாவின் இழப்பு எத்தகையது என்பதை உணரமுடியும்.

விடுதலைப்புலிகள் 'பயங்கரவாதிகள்' வன்முறைவெறியர்கள் என்றெல்லாம் அவதூறுகளைப் பரப்பி தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திவரும் சிங்கள இனவெறிக் கும்பலின் முகத்திரையைக் கிழித்து அவர்களின் கோரமுகத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்தியதோடு, எமது விடுதலைப் போராட்டம் மனித நேயத்தையும் சனநாயகத்தையும் சமத்துவத்தையும் வென்றெடுப்பதற்கான அறப்போராட்டம் என்பதையும் நிலைநாட்டிய பெருமைக்குரியவர் பாலண்ணா. கால் நூற்றாண்டுக்கும் மேலாக தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஒப்படைத்து தமிழீழத் தேசியத் தலைவருக்கு உறுதுணையாக நின்று ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் தத்துவப் போராட்டத்தையும் முன்னெடுத்து வழிநடத்திச் சென்றவர். பகைவனைக் களத்தில் எதிர்கொள்ளவும் துரோகத்தைச் சாதுரியமாக வெல்லவும் வெற்றிகரமான உத்திகளை வகுத்தளித்தவர். அத்தகைய மகத்தான விடுதலைப் போராளி, தத்துவப் பேராசான், மார்க்சிய வழிகாட்டி, சமாதானத்தூதர், அமைதிக் காவலர், அரசியல் வல்லுநர் பாலண்ணாவை காலம் நம்மிடமிருந்து பிரித்துவிட்டாலும் அல்லது பறித்துக் கொண்டாலும், அவர் கட்டமைத்த களம் நம்மை வழிநடத்திக் கொண்டேயிருக்கும். கால் நூற்றாண்டு காலமாய் சர்வதேச அரங்கில் அவர் எழுப்பிய தமிழீழ தேசிய இனத்தின் விடுதலைக்கான கோரிக்கைக் குரல், கோட்பாட்டுக் குரல் தேசத்தின் குரலாய் தொடர்ந்து ஒலிக்கும். தமிழீழத்தை வென்று நமக்குக் கையளிக்கும்.

ஈழம் வெல்லும் - அதனைக் காலம் சொல்லும்

பாலண்ணாவுக்கு வீரவணக்கம்

தொல். திருமாவளவன்
விடுதலைச் சிறுத்தைகள்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# Press Release

The demise of Mr. Anton Balasingham at a critical juncture in the political struggle of the Tamil people, has caused much grief.

For several decades, the Tamil National Struggle was non-violent. Failure to resolve the Tamil National Question peacefully, inexorably led to an armed struggle. The Liberation Tigers of Tamil Eelam were in the forefront of that struggle.

Mr. Balasingham was the theoretician and a principal player in the formulation of the political strategy of the LTTE.

Mr. Balasingham represented the LTTE at negotiations and was the chief negotiator of the LTTE.

Mr. Balasingham had a clear understanding of the inequalities and inequities to which the Tamil people as a whole, were consistently subjected by the Sri Lankan State. He was also aware of the collective violence unleashed against the Tamil people when they engaged in peaceful protests and civil disobedience campaigns. He also had a clear comprehension of the political aspirations and goals of the Tamil people. He was able to articulate the views of the Tamil people on these questions with clarity.

He thus played a very useful and valuable role in the furtherance of the struggle of the Tamil people towards the achievement of their legitimate goals and aspirations.

His demise at this time creates a great void. He could have continued to be of immense service to the Tamil people.

Mrs. Adele Balasingham had always been a source of great strength to him in every possible way. We convey our very deep condolences to Mrs. Balasingham and all others who are grieved by the demise of Mr. Balasingham.

R. Sampanthan
Parliamentary Group Leader
Ilankai Tamil Arasu Kadchi
Tamil National Alliance



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கண்விழித்துக் கண்விழித்துக்
காலமெல்லாம் நடக்கைகள்
வலியோடு உழைத்தவன்
கொஞ்சம் கண்ணயறத் தூங்குகிறார்

தூங்கட்டும் அண்ணன் தூங்கட்டும்
துடித்து அழுது அண்ணன்
தூக்கத்தை யாரும் கலைத்துவிடாதீர்கள்

நம் வலிசுமந்து வலிசுமந்து வாழ்வெல்லாம் வாழ்ந்த மகன்
இன்றுதான் கொஞ்சம் வலிமறந்து தூங்குகிறார்
தூங்கட்டும் அண்ணன் தூங்கட்டும்
துடித்து அழுது அண்ணன்
தூக்கத்தை யாரும் கலைத்துவிடாதீர்கள்

அரசியல் ஆலோசகர்
அடுத்து என்ன செய்யவேண்டும் என்று நமக்கெல்லாம்
அறிவுரை சொல்ல
அறிவுரை சொல்லக் கொஞ்சம்
கண்மூடிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்
கொஞ்சம் கண்மூடிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்
கண்கலங்கி அழுது அரற்றி யாரும்
அண்ணன் சிந்தனையைக் கலைத்துவிடாதீர்கள்
சிந்தனையைக் கலைத்துவிடாதீர்கள்

நம் வலிசுமந்து வலிசுமந்து வாழ்வெல்லாம் வாழ்ந்த மகன்
இன்றுதான் கொஞ்சம் வலிமறந்து தூங்குகிறார்
தூங்கட்டும் அண்ணன் தூங்கட்டும்

தூக்கத்தை மரணமென்று
தூக்கத்தை மரணமென்று ஏதோ தொலைக்காட்சி சொல்கிறதே
குறுந்தகவல் நூறு வந்து உன்னுடைய குறிப்பு சொல்லிக் கொல்கிறதே
கொல்கிறதே - இருக்கும்வரையினில்தான் இலண்டனிலே இருந்திருப்பாய்
இந்த முறையினில் அண்ணா நீ ஈழத்தில் பிறந்திருப்பாய்
இரங்கற் பா எழுதுவதா - வாழ்த்துப் பா எழுதுவதா
எதை எழுத எதை எழுத என்றறியேன் குழம்புதண்ணா

ஈழத்தில் தலைவர் ஈகைச்சுடரேற்றி எம் மாவீரர் நாளன்று
இலக்கணமாய் உரையை இழைத்திழைத்து எடுத்துரைப்பாய்
இலண்டனிலே நீயிருந்து இலக்கணமாய் அழகுதமிழ் எடுத்துரைக்க
ஏற்றதொரு இலக்கியமாய் மொழிபெயர்ப்பை எடுத்தெடுத்து கொடுத்திருப்பாய்
கேட்கக் கேட்க நெஞ்சம் சிலிர்சிலிர்த்துப்போகும் அண்ணா
குலுங்கக் குலுங்க மக்கள் குதூகலித்துப் போகுமண்ணா

வேட்டி அணிந்தவனாய் நீ வேடிக்கையாய்ப் பேச
கோடிக்கைகள் அங்கே குலுங்கிட்டு மகிழுமண்ணா
பார்த்த அண்ணி முகம் பட்டென்று சிவக்குமண்ணா
குருகுருத்த மைக்குழம்பினைம் உன் குறும்புத் தமிழிருக்கும்
சொல்லாமலோ தூங்கும் தமிழர்களைத் துயிலெழுப்ப வைப்பதற்கே
ஆக்கும் எழுத்துகள்போல் கட்டாயம் அறிவிருக்கும்
இந்த ஆண்டு அந்த இனியுரையைக் கேட்கலையே
எங்கள் தமிழ் ஒளியில் உன் இனிய முகம் பார்க்கலையே

மரணம் பாம்பு புற்றுக்குள் இருந்து வந்து கொத்திக்
கொத்தியெம்மைக் கொடுமை செய்த வேளையிலும்
உன் வலியை உள்வாங்கி ஒரு நொடியும் துடிக்கலையே
எம் வலியைத் தான் நீயும் இறுதிவரை பார்க்கலையே
இலண்டனிலே மக்களெல்லாம் இறைவனிடம் உனக்காக

# கண்விழித்துக்
# கண்விழித்து...



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இறுதிப்போதாக எடுத்துரைத்த வேளையிலே
எமக்கள் ஈழத்தில் இன்னமும் பெருமகிழ்ச்சி முன்னாலே
எம்மவரோ எத்தனை - எதிர்க்கிறீர் மீண்டுமோ
என்று நீ எந்த மறுத்தாயோ - அண்ணா
இறுதிவரையும் உறுதியுடன் எவரிடமும் தோற்க மறுத்தாயே
எந்தத் திசைகளிலிருந்தும் சாவு உன்னை
முற்றுகையிட்டபோதும் அந்த முடிவு நொடியிலும்
எம் மக்களின் விடிவுக்காகவே நீ எழுதிக்கொண்டிருந்தாயாமே

எழுத விரல்கள் மறுத்த அந்த இரக்கமற்ற வலியிலும்
எடுத்துச் சொல்லி எடுத்துச் சொல்லி இன்னொருவரை
எழுதவைத்துக் கொண்டிருந்தாயாமே

இறுதிவரை
இறுதிவரை எங்களுக்காகவே எழுதிக்கொண்டிருந்தவரே - எப்படியண்ணா
உங்களுக்கான இறுதிக் கவிதையை நான் எழுதுவேன்
மரணம் அனுமதித்த மாத்திரமான நாட்களிலே
எங்கள் வாழ்வைச் சிந்தித்த மகானே
மனைக் குடையின்கீழ் வாழும் தமிழருக்கு
தூணாயுறுதியாக வாய்த்த நல்லெருமபேறே


ஈழத்தின் இதயம்
ஈழத்தின் இதயம் எங்களைவிட்டு இறுகமாகி எப்படித் துடிக்கும்
ஓ இந்நேரம் புறநானூற்று மறமகளைக்க அநுபவம் தன் பக்கத்தில் விட்டிருக்கும்
உலக ஊடகங்கள் உன்னிப்பாய் உன்னிப்பாய் உற்றுப்பார்த்திருக்க
உற்றுப்பார்த்திருக்க

தலைவரும் நீங்களும் அருகருகே அமர்ந்தன்று அறிவுச் செறிவோடு
அகில உலகினையும் அசைவித்த பொழுதை
இன்று நினைக்கையிலும் என் இதயம் விம்முதண்ணா

யாழ் நூலகத்திற்கு அன்று எதிரிகள் தீ மூட்டினார்கள்
அண்ணா அண்ணா
எங்கள் 'பாலா' நூலகத்திற்கு இன்று நாங்களே அல்லவா
தீ மூட்டவேண்டியிருக்கிறது

இறந்தாலும் இறக்காமல் என்றைக்கும் நீ இருப்பாய்
எம் தலைவர் இதயத்தில் இறங்கியமர்ந்து கட்டாயம்
ஈழத்தில் நீ இருப்பாய்
வீர வணக்கமண்ணா - உங்களுக்கு
எங்கள் கண்ணீரின் வணக்கமண்ணா

அறிவுமதி





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சாவை வரவேற்ற சாமன்யர் பாலா



"சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும்" என்று தாம் முன்னர் உரைத்தபடியே சாவை அரவணைத்தவர் தத்துவாசிரியர் பாலசிங்கம். தமது சாவை நிதர்சனத்தோடு எதிர்கொண்டவர் மதியுரைஞர் பாலசிங்கம். கடந்த மூன்றுவார காலமாக சாவுத் தேவனை வரவேற்க அவர் திடத்தோடும், தெளிவோடும், முழுப் பிரக்ஞையுடனும் தயாராக இருந்தமையை அக்கால கட்டத்தில் அவரது லண்டன் இல்லத்தில் அவருக்கு அருகில் மிக நெருக்கமாக அமர்ந்திருந்து மனம்விட்டு அவ்வப்போது நீண்ட நேரம் அவருடன் உரையாடியதன் மூலம் நிதர்சனமாக என்னால் உணர்ந்துகொள்ளமுடிந்தது.

அவரது வாழ்வின் எஞ்சிய காலம் நான்கு வாரங்கள் முதல் ஆறு வாரங்கள் வரைதான் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியிருக்கும் அதிர்ச்சித் தகவலை புன்முறுவலோடு என்னுடன் அவர் பகிர்ந்த போதும்கூட சாவின் பயம் அவரை எட்டியதில்லை. "சாவுக்கு நான் பயப்படவில்லை. அதன் பாதையில் வரும் நோவுக்குத்தான் அஞ்சுகிறேன்" என்று தனக்கே உரிய சொல்லாடலோடு அவர் கூறிச் சிரித்ததை என்னால் சகித்துக்கொள்ளமுடியவில்லை. சாவுபற்றி அவரது கருத்தை 'விடுதலை' என்ற தமது நூலில் அவர் பதித்துள்ளதை நான் நினைவூட்டியபோது அந்தக் கருத்தை ஆங்காங்கே தொட்டு மீண்டும் அவர் வலியுறுத்தினார். அவரின் தத்துவக் கட்டுரைகள் அடங்கிய 'விடுதலை' நூலில் தத்துவாசிரியரான ஹைடேகரை மேற்கோள்காட்டி பாலா எடுத்துரைக்கின்றார். அதையே தமது சாவுப் படுக்கையிலும் அவர் பகிர்ந்துகொண்டார். தமது மறைவுக்கு முன்னர் சாவுபற்றி அவர் குறிப்பிட்ட அம்சங்கள் சாவுவேளையிலும் அவரது கருத்தில் நிலைத்திருந்ததை என்னால் ஆழமாக உணரமுடிந்தது.

'விடுதலை' நூல் ஊடாக அவர் பிரதிபலித்த சாவின் நிதர்சனம் இதுதான்: 'காலத்தில் முகிழ்கிறது வாழ்வு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே விரியும் காலத்தில்



Tamileelam Archive

நிலைக்கிறது வாழ்வு. இந்தக் காலம்தான் மனித இருப்பின் எல்லைக் கோட்டை இடுகிறது. இருத்தலின் எல்லைக்கு அப்பால் இல்லாமை இருக்கிறது. இல்லாமையை, அதாவது இருத்தலிலிருந்து இல்லாமல் போவதை, சாவு என்று சொல்கிறான் மனிதன். காலமும், நிலையாமையும், சாவும் மனித இருத்தலின் மெய்யுண்மைகள். இருப்பு என்பது காலத்தின் பாதையால் நடைபெறும் பயணம். இந்தப் பயணத்தில் நான் ஒரு கணமும் தரித்து நிற்கமுடியாதவாறு காலம் என்னை நகர்த்திச் செல்கிறது. நான் காலத்தில் மிதந்துகொண்டு பயணிக்கிறேன். நடந்து முடிந்தது இறந்தகாலமாகவும், நடக்கப்போவது எதிர்காலமாகவும், நடந்துகொண்டிருப்பது நிகழ்காலமாகவும் எனக்குத் தென்படுகின்றன. இறந்தகாலம் செத்துப்போனாலும், எனது அனுபவத்தின் நிழலாக அது என்னை சதா பின்தொடர்கிறது. எனது வாழ்வனுபவம் எப்பொழுதுமே நிகழ்காலமாகவே நடைபெறுகிறது. எதிர்காலமானது இறந்தகாலமாக மாறும் நொடிப் பொழுதுகளாக நான் நிகழ்காலத்தை அனுபவிக்கிறேன். நிகழ்கால அனுபவமே நிதர்சனமானது, மெய்மையானது. ஆனால், மனிதன் நிகழ்காலத்தில் வாழாமல், எதிர்காலம் பற்றியே சிந்திக்கிறான். மனித ஆசைகளும், எதிர்பார்ப்புகளும், திட்டங்களும் எதிர்காலத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால், மனித மனமானது எதிர்காலத்தை நோக்கியதாக, எதிர் காலத்தில் நிலைத்துப் போகிறது. செத்துப்போன காலத்தில் புதையுண்டுபோனாலும், எதிர்காலத்தையே சதா எண்ணிக் கிடக்கிறது. நிகழ்காலத்தில் வாழ்வதுதான் அர்த்தபூர்வமானது.

காலத்தில் நிகழும் எனது பயணம் சாவுடன் முடிவடைகின்றது. நிலையற்ற இந்த உலகில், நிலையான ஒன்று உண்டு என்றால் அதுதான் சாவு. எனது உயிர்ப்பின் கணத்திலிருந்து சாவும் என்னோடு உடன் பிறப்பு எடுத்திருக்கிறது. எனது இருத்தலின் ஒவ்வொரு கணத்திலும் இல்லாமை என்ற சூனியத்தை நான் எதிர்கொண்டு வாழ்கிறேன். எனது சாவை நான் பட்டறிந்துகொள்ள முடியாது. இந்த உலகில் அதுமட்டும் எனது அனுபவத்திற்கு அப்பாலானது. எனது அனுபவத்தின் முடிவாக, எனது இருத்தலின் முடிவாக, நான் இல்லாமல் போகும் இறுதிக்கணமாகச் சாவு என்னை எதிர்கொண்டு நிற்கிறது. என்னைச் சூழ எங்கும் சாவு நிகழ்கிறது. மற்றவர்களது சாவை நான் நித்தமும் சந்திக்கிறேன். எனக்கு வேண்டியவர்கள், நான் பற்றுக்கொண்டவர்கள் மடியும்போது, துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. மனித இருப்பின் மிகவும் சோகமான, துன்பமான நிகழ்வாக சாவு சம்பவிக்கிறது. எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் நான் சற்றும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் சாவு எனது கதவைத் தட்டலாம். திடீரென, இருப்பிலிருந்து இல்லாமையென்ற சூனியத்துக்குள் நான் தூக்கிவீசப்படலாம். எனது இருப்பின் நிலையாமை எனக்குத் தெரிந்தும் சாவின் நிச்சயத்துவத்தை நான் உணர்ந்தும் நான் அதுபற்றிச் சிந்திக்கத் துணிவதில்லை. மனித பயங்கள் எல்லாவற்றிற்கும் மூலமானதாக, தலையான பயமாக, மரண பயம் எனது ஆழ்மனக்குகைக்குள் ஒளிந்து கிடக்கிறது. நான் அதை அடக்கி, ஒடுக்கி, என் நனவு மனதிலிருந்து ஒதுக்கி வைத்திருக்கிறேன். சாவு என்பது மனித இருப்பு நிலையின் தவிர்க்கமுடியாத உண்மை என்கிறார் ஹைடேகர். அதை மறுப்பதும், அதற்கு அஞ்சுவதும், அதிலிருந்து ஓடி ஒளிந்துகொள்ள முயல்வதும் அபத்தமானவை. சாவின் பிடியிலிருந்து எவருமே தப்பிவிட முடியாது. அது வாழ்வின் ஒரு நிகழ்வாக என்றோ ஒரு நாள் எதிர்கொள்ளப்படவேண்டியது. சாவைச் சந்திப்பதற்கு மனிதன் துணியவேண்டும். அந்தத் துணிவிலும், தெளிவிலும், விழிப்பிலுமே மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, நிறைவானதாக அமையும் என்று குறிப்பிட்டிருக்கின்றார் பாலா.

அதையே தமது சாவுப் படுக்கைக்கான ஆயத்த வேளையிலும் தத்துவத் தெளிவோடு பகிர்ந்துகொண்டார் அந்த மாமனிதர். தம் இறுதிக்காலத்தில் ஊடகவியலாளன் ஒருவனோடு மதியுரைஞர் பகிர்ந்து கொண்ட கருத்துகள் சரித்திரத்தேவை எழும் போது வெளி வரவேண்டியவை.

ந.வித்தியாதரன்
பத்திரிகை ஆசிரியர், உதயன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாலா அண்ணை வகித்த பாகத்தை உரிய முறையில் மதிப்பிட வேண்டுமாயின் அவர் வருகைக்கு முன்பிருந்த காலத்தை விளங்கிக்கொள்ளல் அவசியமாகின்றது. இன்னொரு வகையில் கூறுவதானால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் அதன் புறநிலை, அகநிலை காரணிகளால் தவிர்க்கமுடியாத வரலாற்று நியதியாக ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்த காலத்தின் முன் உள்ள காலத்தை எம் கண்முன்னே நிறுத்தல் அவசியமாகும். அந்தச் சமுதாயம் பழமையில் ஊறிக்கிடந்தது. சாதிக்கொடுமை தலைவிரித்தாடியது. சமூகத்தின் மேல் தட்டு வர்க்கத்தினரே அரசியலில் ஆதிக்கம் செலுத்தினர். தொழில் சார்ந்த துறைகளில் கல்விகற்றோரே புத்திஜீவிகளாக வலம்வந்தனர். அவர்களுள்ளும் சட்டம் பயின்றோரே 'உயர்ந்தோர் குழாமாக' *(Elite)* அரசியலில் கணிக்கப்பட்டனர். இவர்களே தமிழ்த்தேசிய விடுதலையை பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியும் முன்னின்று நகர்த்திவந்தனர். இவர்கள் அரசியல் மொழியோ ஆங்கிலம். இந்த பண்பியல்புகள் எமது சமூகத்திற்கு மட்டுமானதல்ல. ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய இந்திய உட்பட்ட நாடுகளுக்கும் பொதுவானதே. ஆயினும் எண்ணிக்கையில் அரசபலம் கொண்ட சிங்களதேசம் தமிழர் இருப்பையே கேள்விக்குறியாக்கிய காலகட்டத்தில் வடிவம்பெற்ற ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னால் உள்ள அரசியலை, சமூகவியலை, வரலாற்றை, கலைபண்பாடுகளை, சடங்கு சம்பிரதாயங்களை, புதிய ஒளியில், புதிய மார்க்கத்தில், பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஆயுதப்போராட்டம் ஏற்படுத்தியது. இந்த வரலாற்றுப் பணியை ஆற்றியவர் அன்ரன் பாலசிங்கம். இதனால்தான் இவர் எமது தேசியவிடுதலைப் போராட்டத்தின் தத்துவாசிரியராகின்றார்.

"தத்துவஞானிகள் உலகை விமர்சனம் செய்கின்றார்கள். பிரச்சனை என்னவென்றால் உலகத்தை மாற்றியமைத்தலாகும்" என்றார் கார்ல் மார்க்ஸ். *(Philosophers try to interprot the world, the point is to change it)* பாலா அண்ணை அழகான கதிரையில் இருந்து தன் தத்துவ தரிசனத்தை எமக்குத்தரவில்லை. மாறாக இரத்தமும் சதையும், வேர்வையும் புழுதியும், இடப்பெயர்வும் அகதிவாழ்வும், பசியும் நோயும், மரணங்களும் துரோகங்களும், தீரமும் தியாகங்களும் அவர் இருப்பாக அனுபவத்திலேயே அவர் பேசினார், எழுதினார், பாடம் சொன்னார், கூட்டம் போட்டார் மொத்தத்தில் அவர் ஒரு போராளி.





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராளியாகத் தன்னை இனம் கண்டார். போராளியாக வாழ்ந்தார். போராளியாகச் செயற்பட்டார். இவ்வாறு செயற்பட்டபோது தனது ஆழமான வாசிப்பால், வாசித்தவற்றுள் எமது போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பவற்றை உள்வாங்கினார். அவற்றைப் போராளிகளுடன் பகிர்ந்துகொண்டார். அவர்களிடமிருந்து இவரும், இவரிடமிருந்து அவர்களுமாக இடம்பெற்ற இருவழிப் பாய்ச்சலில் ஆயுதப்போராட்டத்தின் பின்னால் உள்ள அரசியலின் புதிய வெளிச்சங்கள் பாய்ந்தன. புதிய புத்திஜீவிகள் போராட்டத்திற்குள் இருந்து பிறப்பெடுத்தனர்.

கிட்டு என எல்லோராலும் வாஞ்சையோடு அழைக்கப்படும் சதாசிவம் கிருஷ்ணகுமாரின் மொழியில் கூறுவதானால்:
"...விற்கு கொத்தும் கந்தனும் கன்று வடிக்கும் புத்தனும் கோவணத்துடன் தோட்டம் கொத்தும் ராமையாவும் காரவலை இழுக்கும் கோபுவினதும்... வாழ்வு வளம் பெற உழைப்பது 'ஆத்மீகமும் புரட்சியாகின்றது.'"

தமிழரும் நவீன ராஜதந்திரங்களுக்கு முகம்கொடுத்து நிற்கும் புதிய மனிதர்களும் எம்மிடையே தோற்றம் பெற்றனர். அதிகாரவர்க்கத்தோடு எவ்வேறுதிறத்த தமிழ் அறிவுலகில் பாலா அண்ணரின் வரவு ஒரு உரசலையும் ஏற்படுத்தியது எனலாம். ஆயுதப்போராட்டத்தின் அரசியல், கலை இலக்கியங்களிலும், சமூகவியலிலும், மானிடவியலிலும், தனிமனித சிந்தனைகளிலும் மாற்றங்களை வேண்டி நின்ற வேளையில் அந்த ஆயுதப் போராட்டத்தின் விளைவுகளில் ஒன்றான பாரிய புலம் பெயர்வும் பெரும் மாற்றங்களை வேண்டி நின்றன. இந்த வகையிலும் குறிப்பாக சென்ற நூற்றாண்டின் 1989 ஆம் 1990 ஆம் ஆண்டுகளில் பாலா அண்ணர் ஆற்றிய பணிகளை நோக்கி மதிப்பிட வேண்டும்.

ஏறத்தாள முப்பது ஆண்டுகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்து வாழ்ந்த பாலா அண்ணர் எழுதிய எழுத்துக்கள் பல நூல் வடிவம் பெற்றுள்ளன. அவற்றுள் பெரும் அறிஞரும் நாவலாசிரியருமான டால்ஸ்டாயின் புகழ் பூத்த போரும் சமாதானமும் என்ற நாவலின் தலைப்பில் பாலா அண்ணரால் வடிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் ஆயுதப் போராட்டத்தினதும் சமாதான முன்னெடுப்புக்களினதும் ஆவணங்களாகப் போற்றப்படும் என்பது நிச்சயம். ஆயுதப் போராட்டத்தினை

# தேசத்தின் குரல்
# பாலா அண்ணா நினைவாக...

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
அவுஸ்திரேலியா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புறநிலைக்காரணிகள். நெருக்கடிமிகுந்த இந்தியத் தலையீட்டுக்காலத்தில் இயக்கம் எதிர்கொண்ட சவால்கள், திம்புவில் இருந்து ஒஸ்லோ வரை நகர்த்தப்பட்ட சமாதான முன்னெடுப்புக்கள் யாவும் ஒரு கற்பியல் பாடநூல் முறையில் எழுதப்பட்டுள்ளது.

இலாது ஆழமான வாசிப்பிற்கும், சிந்தனைக்களத்திற்கும் சான்று பகரும் நூலாக இவர் பல்வேறு காலங்களில் எழுதிய கட்டுரைகளின் தொகுதியாக நூலுருப்பெற்றுள்ள "விடுதலை" என்னும் நூலைக் குறிப்பிடலாம். மாற்றங்களை வேண்டிநிற்கும் எந்த ஒரு கருத்தியலோ, சிந்தனையோ, தத்துவமோ உலகத்தில் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமும் திருத்தமும் இன்றி நிற்குமேயானால் மாற்றம் எடுக்கும் திசை சார்பில் நிகழும் மாற்றங்களை அவதானித்துச் செயலாற்ற வழிவகுக்கும் கருத்தியலே வெற்றிக்கு எம்மை இட்டுச் செல்லும். விடுதலையில் இட்டு கிருஷ்ணமூர்த்தியின் மனப்பரப்பிலை "மனித வாழ்வுக்கு மனிதனே அர்த்தத்தைக் கற்பிக்க வேண்டும்" என்னும் பிரஞ்சு இருப்பியல்வாதியான அல்பேட் கமியூ (*Albert Camus,1913-1960*) வாதங்களை, சென்ற நூற்றாண்டின் கணிசமான காலப்பகுதியை ஆட்கொண்டு ஐரோப்பிய சிந்தனை உலகை ஆட்டிப்படைத்தவரும் எழுத்து என்றால் என்ன, ஒரு எழுத்தாளன் ஏன் எழுத வேண்டும்? அவன் யாருக்காக எழுத வேண்டும்? என்னும் கேள்விகளுக்கு விடையளித்தவருமான ஜோன் போல் சாத்ரே (*Jean Paul Satre 1905-1980*) பிரான்ஸ் பனான் எழுதிய "பூமியில் இழித்துரைக்கப்பட்டோர்" (*Wretched of the Earth*) கார்ல் மார்க்ஸையே கவர்ந்த ஜேர்மன் தத்துவஞானியாகிய ஹேகல் (*Hegel*) சிந்து மாவோ, "நாகரிகங்களின் மோதலும் உலக ஒழுங்கை மீளமைத்தலும்" என்ற சாமுவேல் ஹண்டிங்டன் எழுத்துக்கள், (*The Clash of Civilizations and the Remaking of World Order*) உணர்ச்சிமயமான மனிதனைக் காணும் சிக்மண்ட் பிராய்டின் கருத்துக்கள், 'வரலாற்றின் முடிவு' என்னும் சர்ச்சைக்குரிய பிரான்சிஸ் புக்குயாமாவின் கருத்துக்கள் எனப் பல சமூகவியல், வரலாற்றியல், இருப்பியல், மானிடவியல் சார்ந்த சிந்தனையாளரின் கருத்துக் கருவூலங்களை அழகான தமிழ் நடையில் பாலா அண்ணர் எழுதியுள்ளது போராட்டத்திற்கு அவர் அளித்த மாபெரும் கொடையாகும். சிந்திக்கத் தூண்டும் இந்த எழுத்தோவியங்கள் அவர்களை ஆகர்சித்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

இவை யாவற்றையும் விட எளிமையான பண்பும், வாழ்வும், கலைதோய்ந்த அவரது உரையாடல்களும், அந்த உரையாடல்களில் வட்டாரத் தமிழை அவர் சரளமாகப் பயன்படுத்தும் அந்த மண்ணின் வாசமும், என்றுமே எம்மை விட்டகலா நினைவுகளாகும். அவருக்கு யாவற்றிலும் துணையிருந்து அவரை நல்ல அர்த்தநாரீஸ்வரராக வலம் செய்ய வைத்த அருமைச் சகோதரி அடேல் அவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

குரூரமான கொடுமையான உலகம் ஒன்றை எதிர்த்து பாலா அண்ணர் போராடினார். அந்தப் போராட்டம் அதன் உச்சப் பரிணாமத்தில், பாரிய சவால்களை எதிர் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவரின் மரணம் ஒரு அகால மரணமாகும்.

*"Large trees seem larger when they dominate a forest, there they are at home.."* என்பர். பாலா அண்ணை என்ற விருட்சம் அதன் புறநிலையோடும், உறவுகளோடும், உணர்வுகளோடும் ஒன்று பட்டு நிற்பதால் அந்தக் காட்டின் பெரு விருட்சங்களில் ஒன்றாக என்றுமே கோலம் காட்டி நிற்கும். இந்த வாய்ப்பு எல்லோருக்கும் வசப்படக்கூடியதொன்றல்ல. இது வானத்தில் இருந்து விழுவதுமல்ல. நிலத்தில் ஆழமாக ஊன்றிய தேசபக்தியின் உருவமே அன்ரன் பாலசிங்கம் என்னும் எமது பாலா அண்ணை.



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தலைவரின் குரலாய்
தலைவரின் கையால் முகவுரை
எழுதப்பட்டவன் நீ!

உன் பொருளடக்கம்
தமிழீழத்தின் குரலாய்
தமிழ்த் தேசத்தின் மொழியாய்
தமிழ் மண்ணின் ஒலி பரப்பாய்
தரணியெங்கும் ஒலித்தது.

தமிழீழ அரசியல் போரில்
மதியுரைஞராய்ப் பரிணமித்த
செஞ் சூரியன் நீ!

உன் கத கதப்புச் சூட்டில்
பல குஞ்சுகளை உருவாக்கினாய்!

தமிழீழத்தின் விடிவுக்காய் - தலைவன்
அக ஆயிரம் எழுத
உலகப் பரப்புரைக்காய்
புற நூறுகள் பல எழுதியவன் நீ!

தம்பியவன் செக்கென்றால்
அண்ணன் நீ எள்ளானாய்!
அவன் எள்ளென்றால்
நீ எண்ணெயாய் உலகெங்கும்
வடிந்தாய்!

பித்தலாட்டப் பேச்சுவார்த்தைக் களங்கள்
பல கண்டவன் நீ!

சிங்களத்தின் பொய்ப் பிதற்றல்களை
அக்கு வேறு ஆணி வேறாய் உடைத்து
எறிந்தாயாம்
பார்த்தவர்கள் புளகாங்கிதமுற்றுப்
பெருமையாய்ச் சொன்னார்கள்!
உன் வாய் வல்லமையைச் சிலாகித்து
வாய் ஓயாது சொல்லிச் சொல்லி
ரசித்தார்கள்!

எம் பெருந் தலைவனுக்குக் கிட்டிய
அருஞ் சொத்து நீ!
தமிழ் மக்களின் பெரும் விருந்தானாய்!

உன் பன்முக ஆற்றலும் ஆளுமையும்
பெரும் சத்தான வித்தகமும்
தமிழீழத்தின் விடிவுக்காய்
இறுதி வரை தந்தவன் நீ!

நீ! தமிழினத்தின்
மாபெரும் ஒளி விளக்கு
போய் வா அண்ணலே போய் வா!
கண்ணீர்க் கவிதைகளால்
வாழ்த்தி வணங்குகிறோம்!

மீண்டும் சந்திப்போம்
தமிழீழ மண்ணில்!

## ஒளி விளக்கு

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
மெல்பன் அவுஸ்திரேலியா







Tamileelam Archive

# உலகத்தமிழர் இயக்கம்
# World Tamil Movement

## தேசத்தின் குரல் மக்கள் குரலாகட்டும்

'பாலா அண்ணை' என்றும் 'பாலா அப்பச்சி' என்றும் தமிழர் தேசமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் எங்கள் தமிழ் அன்னையின் பிதாமகன் மறைந்தார் என்ற செய்தி இடியென வந்தது. எமது விடுதலைப் பயணத்தின் முக்கிய காலகட்டத்தில் தேசத்தின் குரலை இழந்தோமேயென வெம்பி வெடித்தது கனடியத் தமிழர் நெஞ்சம்.

சத்தியத்துக்கானது எங்கள் போராட்டம். உரிமை வேண்டியது எங்கள் பயணம். 'எங்களையும் வாழ விடுங்கள்' என்ற எங்கள் குரலை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச்செய்த மூன்று தசாப்த காலச்சக்கரம் மூச்சிழந்து போனது என்ற செய்தியால் எழுந்த கனடியத் தமிழ் உறவுகளின் உணர்வுகளை வடிக்க எம்மிடம் வார்த்தைகளே இல்லை.

மூன்று தசாப்தங்களாக தலைவருக்கு உற்றதுணையாக, தேற்றும் தோழனாக, ஆலோசனை வழங்கும் இராஜகுருவாக, தலைமையின் எண்ணக்கருத்தை வெளிப்படுத்தும் குரலாக பாலா அண்ணா இருக்கிறார் என நிறைவுடனிருந்தோம். பாலா அண்ணை என்ற எங்கள் ஒளி விளக்கு அணைந்ததாய் நம்ப மறுக்கிறது மனசு.

மனித வாழ்விற்கு அர்த்தம் தேடும் உலகில், அதற்கான முழுமையான அர்த்த வெளிப்பாட்டை வெளிப்படுத்தியவரே பாலா அண்ணா. வாழும் காலத்தில் நல்லதையே செய்ய வேண்டும் அதுவும் மக்களுக்குச் செய்ய வேண்டும். மக்கள் மேம்பாட்டிற்கு மக்கள் நலனை முன்னிலைப்படுத்திச் செயற்பட வேண்டும் என்று விரிந்து வியாபித்துச் செல்லும் உலகில், அதன் வழி தழுவி தமிழீழத் தமிழர் நலன் பேணியவரே எங்கள் தேசத்தின் குரல்.

பாரா முகம் காட்டும் உலகின் மனச்சாட்சியை உலுக்கியவர். ஒடுக்குமுறைக்குள்ளாகி திக்கற்று நிற்கும் எம் உறவுகளின் உரிமைக் குரலாக நிமிர்ந்தவர். சர்வதேச சட்டங்களுக்கே சாவுமணியடிக்கும் சிங்கள தேசத்தின் சிம்ம சொப்பனமானவர்.

சர்வதேசம் மதிக்கும் இராஜதந்திரி. எந்த வாசகனையும் கவரும் தேர்ந்த எழுத்தாளர். செய்திகளை ஆய்ந்து வெளிப்படுத்தும் உண்மைப் பத்திரிகையாளன். பாமரரும் விளங்கிக்கொள்ளும் வகையில் பேசும் மக்கள் பேச்சாளன். இயற்கையை நேசிக்கும் இயற்கைவாதி. தன்னைச்சுற்றி நிற்பவர்கள் அனைவருக்கும் உலகதரிசனம் வழங்கும் யதார்த்தவாதி. தனித்துவத்தையும் புதுமைகளையும் தன் தலைமை சார்ந்து வெளிப்படுத்தும் புதுமைவாதியெனப் பரிமாணம் பெற்று உயர்ந்து நிற்பவரே எங்கள் பாலா அண்ணா.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

"முக்கியமான காலகட்டத்தில் இருக்கிறோம் இப்படியே இழுபட்டுக்கொண்டு போகேலாது. எங்கட இலட்சியத்தை வென்றாக வேண்டும். உலகத்தமிழரெல்லாம் திரண்டு எழவேண்டும். தலைமைக்குப் பின்னால் அணிதிரண்டு எழுச்சிபெற வேண்டும்" என்ற எமது தேசக் குரலின் அறைகூவல் எம் காதுகளில் ஓங்கி ஒலிக்கிறது.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று மூச்சிலும் பேச்சிலும் கலந்த தலைமைக்குயில் இன்று நீங்காத துயிலில் ஆழ்ந்து விட்டாலும் எங்கள் தேசியத்தலைவர் கூறியதுபோல, உண்மையில் அவர் எம்மை விட்டுப்போகவில்லை. எமது நினைவலைகளில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நின்று எங்களை வழிப்படுத்துகிறார். அவர் வழி தொடர்ந்து, தேச விடுதலையை வென்றெடுப்போம். தமிழீழ தேசம் காப்போம்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

உலகத்தமிழர் இயக்கம்
கனடா





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# *Liberation Tigers of Tamil Eelam*

தேசியத்தலைவர் வழி நின்று மூன்று தசாப்தங்களாக தமிழீழ விடுதலைக்காக தன் உயிர், உடல் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் போராடி வாழ்ந்த மதியுரைஞரும், தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அண்ணா அவர்கள் எம்மோடு வாழ்ந்த காலத்தை யாரும் மறந்து விடமுடியாது.

விடுதலை வாழ்வை நேசிப்பதற்கு முன்னரே, புத்திஜீவிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் புரட்சிப் போர்வடிவத்தை எடுத்துக்காட்டி, சகல அடக்கு முறைகளுக்கும் எதிராக குரல் கொடுத்த இலட்சிய வேங்கை எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்ததையெண்ணி நாம் கலங்கி நிற்கிறோம்.

உலகத்தின் இராஜதந்திரங்களை எல்லாம் வெல்லக்கூடிய சக்தி வாய்ந்த மாமனிதராக, துன்பத்தோடும் துயரத்தோடும் வாழும் எம்மின மக்களோடு கூடி வாழ்ந்து, சிங்களவர் தந்திர வியூகத்தை அறிவால் உடைத்தெறிந்த பாலா அண்ணனின் பிரிவு எம்மை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

சாவோடு போராடி சரித்திரம் படைத்த தியாகவொளியே, டென்மார்க்கில் நீங்கள் எம்மைச் சந்தித்த போது உங்களை நோய் வாட்டியது, வருத்தியது. அந்த வேளையிலும் விடுதலை வேட்கையுடன் வீறுகொண்டு, டென்மார்க் நாட்டு அரசியல்வாதிகளுக்கு தமிழினத்தின் நிலையை எடுத்துக்கூறிய செயல் வீரனே உங்கள் தியாகத்தை நாம் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது.

உலகத் தமிழினமே உங்கள் பிரிவைத் தாங்க முடியாது தவிக்கும் வேளையில், எங்கள் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பேரொளியின் பேரிழப்பைத் தாங்கமுடியாது துயரச் சுமையோடு உங்களுக்கு அளித்த 'தேசத்தின் குரல்' நாமத்தை எங்கள் மனதில் நிலை நிறுத்தி, உங்கள் இலட்சிய பாதையில் நாமும் பயணிப்போம் என உறுதி செய்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

தமிழீழ விடுதலைப் புலிகள்
டென்மார்க்கிளை.



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பாலாண்ணா எனும் பெருவிருட்சம்...

அன்ரன் எனும் விடுதலையின் பெருவிருட்சம்
தனது விழுதுகளை தமிழ் மண்ணுக்குள் ஊன்றிவிட்டு
தமிழரின் மனங்களுக்குள் இரண்டறக் கலந்து விட்டது.
அர்ப்பணிப்புக் கிலக்கணமான பாலா அண்ணாவே!
உங்கள் இனிமையான தமிழ் பேச்சை எம் காதுகளுக்குள்
உரைப்பது இனி யாரோ ?

ஆயுதத்தைக் கையிலெடுத்து சிங்களத்தை
நீங்கள் எதிர்க்காவிடினும்
உங்கள் வாக்கு வன்மையால் அவர்களை
நிலை குலைய வைத்தீர்களே!
ஊனை உருக்கி உயிரைத் தமிழினத்துக்காய்
அர்ப்பணித்த மனிதநேயம் மிக்க மாமனிதனே!
உனது இழப்பு உன் துணைவிக்குப் பேரிழப்பு!
தமிழினத்தின் தலையில் விழுந்த பேரிடி!
தமிழினத்தின் தலைவருக்கு தோளோடு தோள் கொடுத்து
நின்ற அரசியல் சாணக்கியனே!
புற்றுநோய் உன் உடலுக்குள் புற்றெடுத்து விட்டதால் நீ
சென்று விட்டாய் உன் அன்பான மக்களை விட்டு!

ஆற்றுவாரின்றி அழுது புலம்புகின்றோம் இங்கு
உன் பிரிவால்!
தமிழினத்தின் தத்துவ ஒளியே! தமிழீழ விடிவிற்காய்
நோயின் கோரப் பிடிக்குள் சிக்குண்டு
வித்தாகிப் போன உன் உடலில் பல வீர விழுதுகள்
விருட்சங்களாகி வரும்.
இது நித்தியமான சத்தியம்!

தமிழீழத் தேசத்தின் குரல் என தலைவனால்
கௌரவிக்கப்பட்ட பாலா அண்ணாவே!
எமது இதயங்களில் ஒளி விளக்காய்
என்றென்றும் நீ இருப்பாய்!
தமிழினத்தின் தத்துவ ஆசிரியனாய்
அரசியல் ராஜதந்திரியாய்
இலட்சியப் பற்றுறுதி கொண்டு
எமது சுதந்திர உரிமைகளுக்காக
குரல் கொடுத்த உனது குரல் ஓய்ந்து போனது.

இது எமது இனத்திற்கு ஏற்பட்ட ஈடுகட்ட
முடியாத இழப்பையா!
ஆனால் நீங்கள் இறக்கவில்லை! உலகத் தமிழ்த்
தேசியத்தின் நினைவுகளில்
நீங்காத நினைவலைகளாய்
நிறைந்திருப்பீர்கள் என்றென்றும்!





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காத்திருப்போம் ஐயனே போய்வா!

தமிழர்க்கு ஒளியாகி; தலைவர்க்குத் துணையாகி
புலத்திலும் களத்திலும் புதுமைகள் புரிந்தவரே!
சிங்கத்தின் பெயரில் சீறிடும் புலியாகி நின்றவரே!
எடுத்த பயணம் முடிப்பதற்கு இரண்டொருநாள் இருப்பதற்குள் எமையிருட்டில் விடுவதில் ஏனிந்த அவசரமோ?
விடியலை விரைவு படுத்திவிட்டு
நீங்கள் மட்டும் வேறிடம் விரைந்ததென்ன?
காத்திருப்போமோர்நாள், ஓங்கிமழைபொழிந்தோய்ந்து
நிர்மலமான வானத்துடன் ஓர் வசந்தகால வேளையில் பகைமதிறைந்த புற்றிடர்களில் இருந்து
எம்மண்ணில் களமாடி விதையாகிப் போன
ஆயிரமாயிரம் மாவீரர்களுடன்
எழுந்து நீங்கள் வரும்வரை,
உங்கள் நினைவுகளாலெமைப் புனிதப் படுத்தக்
காத்திருப்போம், சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்காய்!

தேசத்தின் குரலான பாலா அண்ணன் அவர்களுக்கு பின்லாந்தின் தமிழரவை தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

ஹெல்சிங்கி


தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தமிழ் ஆவணகாப்பகம்
Tamildiasam Archive

## தேசத்தின் குரலுக்கு வீரவணக்கம்

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு தமிழினம் எத்தனையோ இழப்புக்களை சந்தித்திருக்கின்றது. பல வடிவங்களில் அது நிகழ்ந்திருக்கின்றது. ஆனால் பாலா அண்ணாவின் இழப்பு வித்தியாசமானது. ஒரு பக்கம் ஆயுதப்போராட்டம் நடக்க, மறுபக்கம் அரசியல் ரீதியாக விடுதலை இயக்கத்தின் நிலைப்பாட்டையும், தமிழ்மக்களின் துன்ப துயரங்களையும் சர்வதேசத்திற்கு எடுத்துச் சொல்லும் குரலாக பாலாண்ணா இருந்தார். விடுதலைப்போராட்டத்தில் அவருடைய பங்களிப்பு அளப்பரியது. அத்தோடு மறுபுறம், புலத்தில் எம் மக்களுக்கும் அரசியல் ரீதியாக தெளிவுபடுத்தும் ஒரு ஆளுமை இமயமாக பாலா அண்ணா செயற்பட்டார். அதன்பால் மக்களும் தமிழீழத் தேசியத்தலைவரை எப்படி நேசித்தார்களோ அதே போல எங்கள் பாசத்திற்குரிய தேசத்தின் குரல் பாலா அண்ணாவையும் நேசித்தார்கள். எங்கள் தேசத்தின் குரல் பாலா அண்ணாவை துணைவராக ஏற்று, அவர் நேசித்த தேசியத்தலைமையையும் தமிழீழ மக்களையும் அவரையும் நேசித்து வரும் அவரின் அன்புத் துணைவியாரை நாம் என்றும் மறந்து விட முடியாது.

உலகின் இயக்கத்திற்கு சூரியன் அவசியம் போல, எமது தமிழீழ விடுதலைப்போராட்டத்தை எடுத்துக் கொண்டால் சூரியனைப்போல எமது தலைவர் ஒளிகாட்டி-வழிகாட்டிச் செல்ல, இரவின் இருளைக் கலைக்கும் நிலவு போல எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் வெற்றிக்கு "மதி ஒளி" வழிகாட்டினார் எங்கள் தேசத்தின் குரல் பாலா அண்ணா. அவரை நோய் ஆட்கொண்டிருந்த போதும், தான் நேசித்த தலைமையையும், தமிழ் மக்களையும் சதா சிந்தித்துக் கொண்டேயிருந்தார். மிகவிரைவில் எமது விடுதலை இலட்சியம் அடையப்பட வேண்டும் என்ற விடுதலைத்தாகத்துடன் இன்று விழிமூடினார்.

சர்வதேசமே! அவரை இன்று பொய்யுரைக்காத உண்மை மனிதர், கோபுரம் போன்றவர் என்று புகழாரம் சூட்டும் அளவிற்கு, எங்கள் உண்மையானதும் நேர்மையானதுமான விடுதலைப்போராட்டத்தின் அரசியல் வெற்றிக்கு முதன்மையானவராக செயற்பட்டார். முடிவில் தன் விழி மூடும் வேளையிலும், எம் விடுதலைப்போராட்டத்திற்கு மறைமுக அங்கீகாரம் பெற்றுத்தந்துள்ளார். புலிகளின் அரசியல் ஆலோசகர்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொய்யுரைக்காத மனிதர் என்றால், சர்வதேசம் அவரை ஏற்றுக் கொண்டதன் மூலம், எங்கள் விடுதலைப்போராட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்பது இன்றைய காலத்தின் பதிவாகும்.

எனவே தான் நாம் இன்றைய நாளில் அவர் என்ன நோக்கத்திற்காக உழைத்தாரோ, அந்த நோக்கத்தை நாங்கள் வென்று தமிழீழத்தனியரசை அவர் மடியில் சேர்ப்பிக்க வேண்டும் நாம் சோர்வடையாமல் எல்லோரும் ஒன்று பட்டு விடுதலைக்காக உழைக்க வேண்டும். நாங்கள் சிந்திப்பதோடு நின்று விடாமல் அதைச்செயற்பாடாக மாற்றி விடுதலை காணும் நாள்வரைக்கும் அயராது உழைக்க வேண்டும் இதுவே எங்கள் பாசத்திற்கும் நேசத்திற்குமுரிய தேசத்தின் குரல் பாலா அண்ணாவிற்கு நாம் செய்யும் வீரவணக்கமாகும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுக் கிளை





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சத்தியத்தின் வாழ்வுக்காய் நித்தம் உழைத்த நாயகனே
நீ சாகவில்லை தேசத்தின் குரலாய் பிறந்திருக்கிறாய்
சத்தியத்தின் வழி நின்ற உத்தமனே
சரித்திரத்தில் வாழும் உன் பெயரே

தேசியத்தலைவரின் நெஞ்சில் நீக்கமற நிறைந்த நேரியனே
சத்திய வாழ்வுக்காய் நித்தம் உழைத்த நாயகனே
நீ சாகவில்லை தேசத்தின் குரலாய் பிறந்திருக்கிறாய்
தேசமோ விடியலுக்காய் காத்திருக்க
காலனோ உனக்காக காத்திருந்தான்
நீ காலனை எதிர் கொள்ள காத்திருந்த செய்தி
அறிந்து காலனே நடுக்குற்றானாம்

அனுபவமே பிணக்கும் ஆளுமை
உன் அறிவால் பறக்கும் பேச்சிலிருக்கும்
உன் முன் பேச வரும் எதிரிக்கும்
வஞ்சகத்தால் எமை வெல்லலாம்,
எமை கொல்லலாம் என நினைப்போர்க்கும்
உனைக் கண்டதும் வேர்த்து விறுவிறுத்து
மூச்சிரைக்குமாம் ஐயா
அனுபவம் பிணக்கும் வேகத்தில்
அவையுறக்க பேசும் உனக்கில்லையா

மூச்சிரைக்கவேண்டும், வேர்க்கவேண்டும்
உன்னை எப்படி சாத்தியமாயிற்று
மதியுரைஞனே உன்னால் எப்படி சாத்தியமாயிற்று
ராஜ குருவே, எங்கள் தேசத்தின் குரலே
உன்னால் எப்படி சாத்தியமாயிற்று

களத்தில் உன் சோதரர் போர்க்கருவி கொண்டு போராட
நீ உலக அரங்கில் நாவை கருவியாக்கி போராடினாய்
அதில் வெற்றி கண்டாய்
தந்திரத்தால் எமை வெல்ல நினைத்தோர்க்கும்
வஞ்சகத்தால் எம் விடுதலையை கொல்ல நினைத்தோர்க்கும்
காலனாய் கண் முன் நின்றாய்
அரசியல் ஞானியாய் ஆனாய்

சிரித்த முகம்
மிடுக்கான தோற்றம்
நேர் கொண்ட பார்வை
தத்துவத்தின் முதல்வன்
தமிழீழத்தின் புதல்வன்
புலிகளின் அரசியல் அறிஞன்
முத்தாய்ப்பாய் எங்கள் முதலோனின் நம்பிக்கை

# தேசத்தின் குரலுக்கு கவி வணக்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உத்தமனே எங்கள் தொப்புள் கொடி உறவே
உன் இழப்பை எப்படி ஈடுசெய்வோம்
எப்படி துணிந்தான் காலன் உனைக்கவர
எப்படி துணிந்தான் காலன் உனைக்கவர
சத்தியத்தின் சாட்சி பாலா
சத்தியத்தின் கருவே பாலா
மதியுரைஞரின் வித்தகனே பாலா
எங்கள் தேசத்தின் குரலே பாலா
தேச விடுதலைக்காய் தேசியத்தின் வழி நின்றாய்
தேசத்தின் பணியே முதலென முடிவு செய்தாய்
நோய்கள் பல அணைத்தாய்
பகலிரவு பாராமல் பணி செய்தாய்

சிலர் வாழ்வதற்காக உழைத்தார்கள்
நீ விடுதலைக்காய் உழைத்தாய்
பலர் வாழ்வுக்காக போராடினார்கள்
நீ தமிழீழ விடுதலைக்காய் போராடினாய்
விடுதலைப் பணியே முதலென - எங்கள்
முதல்வன் வழி தொடர்ந்தாய்
உத்தமனே எங்கள் தொப்புள் கொடி உறவே
உன் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

உன் மதி உரைகளை மனங்களில் நிறைத்து
விரைகின்றோம் விடுதலைக்கான பயணத்தில்

உனை நினைத்து நெஞ்சுருகிப்பாட
வார்த்தைகள் வர மறுக்கும்
ஒரு கணம் விழிகளை மூடி
மதி மா மனிதன் முகம் அதைத் தேட
அவர் தம் நினைவுகளோடு பாடல் பிறக்கும்
விழி நீர் சொரிய விடியலின் பாடல் ஒலிக்கும்
விழிகளை மூடி குழிகளில் வாழ்வோர்
கல்லறை கதவுகள் திறக்கும்
சத்தியத்தின் வாழ்வுக்காய் நித்தம் உழைத்த நாயகனே
நீ சாவில்லை தேசத்தின் குரலாய் பிறந்திருக்கிறாய்

- தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளை



Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# *Liberation Tigers of Tamil Eelam*

## எமது தேசத்தின் ராஜகுரு ஓர் தனி மனிதன் அல்ல

இயற்கை உன்னதம் வாய்ந்த சக்தி நிறைந்தது. அதன் படைப்பின் ரகசியம், சுதந்திர வெளிப்பாட்டின் பரவலாக்கத்திலேயே தங்கியுள்ளது. ஆகவேதான், இயற்கை மிக அற்புதமான படைப்புக்களை உலகிற்குக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. மனிதன் அதன் படைப்பின் சிறந்த வெளிப்பாடாகும். இயற்கையின் வெறுதியே சுதந்திரதேடலில் இருக்கும்பொழுது, அதன் படைப்பான மனிதன் இயற்கையின் விதிக்கு அமைவாகவே வாழமுடியும்.

அந்த நிலையில் தமிழினம் அழிவுற்றுத் தாழ்வடையும் பொழுது, அதைச் சமப்படுத்த, இயற்கை எமக்குத் தந்த அதிஉன்னதப் படைப்புத்தான் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள். அந்த மாபெரும் சக்தியை ஏந்தி நிற்கும் கலசமாக தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களை இயற்கை நமக்குத் தந்தது. இன்று அந்த தேசத்தின் குரலை இழந்து நாம் தவிக்கின்றோம். பாலா அண்ணை அவர்களின் இழப்பின் வெளிப்பாடாகத் தெரிகின்ற விடயம், அவர் தேசத்திற்குச் செய்த பணிகளின் சக்தியை யாரும் ஈடுசெய்ய முடியாது என்பதுதான். அவரின் ஆற்றலின் சக்தியை முழுமையாகப் புரிந்த ஒரே ஒரு மனிதப்பிறவி, எமது தேசியத்தலைவராக மட்டுமே இருக்க முடியும்.

ஆகவேதான், மனிதத்திற்கு அப்பாற்பட்ட உறவு என்று தலைவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். எமது தலைவரை, தளபதிகளை, பொறுப்பாளர்களை, போராளிகளை, செயற்பாட்டாளர்களை, மக்களை, தன் மதிநுட்பத்தால் வழிநடத்திய பிதாமகன் பாலா அண்ணை மட்டுமே என்பது மிக ஆழமான, யாருக்கும் கிடைக்காத பேறு என்பதுவே சத்தியமாகும்.

எமது தேசத்தின் ஆளுமைச்சக்தியாக, எம்மை வழி நடத்திய பாலா அண்ணை தன் ஆத்ம சக்தியாய், எம்முள் கலந்து வழி நடத்துவார் என்பது, எமது உறுதியான நம்பிக்கை. எமது தேசத்தின் ராஜகுரு ஓர் தனி மனிதன் அல்ல, அவர் தமிழ் இனத்தின் குரலாக ஒலித்தவர். தேசத்தின் குரல் என்ற கௌரவம் பெற்ற ராஜகுருவின் பிரிவுத்துயரில் வாடும் தமிழீழ விடுதலைப்புலிகள் பேர்மனிக் கிளையினரும், பேர்மனி வாழ் தமிழீழ மக்களும், அவர் இலட்சியத்தை நோக்கி, தமிழீழத்தை வென்றெடுக்க உறுதி பூணுவோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்
பேர்மனிக்கிளை.



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive







தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எங்கள் ராஜகுரு விழிமூடித் தூங்குகிறான்
எங்கள் தேசவிழி கண்ணீரைச் சொரிகிறதே - அவன்
பேசும் ஒலி உலகெங்கும் கேட்கிறதே - எங்கள்
தேசமகன் சாய்ந்த செய்தி கனக்கிறதே

நண்பனாகி அறிஞனாகி வழி திறந்தான் - எங்கள்
மண்ணுக்கான தத்துவங்கள் விதி வகுத்தான்
பேச்சுவார்த்தை மேசையிலே அறிவானான் - அவன்
பேசுகின்ற ஒலியில் தேசக் குரலானான்

மதிநிறைத்து தேசத்தையே செதுக்கி வாழ்ந்தான் - எங்கள்
விதி விதைத்து விழிமூடி தூங்குகின்றான்
தமிழீழ விதி மாற்றும் மதியுரைஞா - உன்னை
தமிழீழம் பதிவாக்கும் ஆணிவேரில்

தேசத் தலைவன் உயிர் நண்பன் நீதானே - உன்னை
தேசம் போற்றும் பிதாமகனும் நீதானே
மூத்தவழி தலைமகனும் நீதானே - எங்கள்
தத்துவத்தின் ஒளி விளக்கும் நீதானே

வார்த்தைக்குள் அடங்காத வலிதோய்ந்து - இன்று
வாடுகிறோம் உம் மக்கள் மதியுரைஞா
பார்வைக்குள் புலப்படாத நினைவலையுள்
பார்த்திடுவோம் நம்புகிறோம் மதியுரைஞா

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
யேர்மனி

# ராஜகுரு



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

## தேசத்தின் குரலுக்கு வீர வணக்கம்

தமிழீழ தாயகத் தலைவனின் இராஜகுருவோன்
தமிழீழ விடுதலை வீரரின் வழிகாட்டி
தமிழீழ மக்களின் விடுதலையின் இதயநாதன்
தமிழீழ ஆன்மாவோடு வீச்சம் கொண்டு வியாபித்து நின்றோன்
தமிழீழ பகை வென்ற மதியோன்
உலகத்தமிழ் மானிட விடுதலையின் காற்று
எங்கள் தமிழீழத் தாயகத்தின் தேசத்தின் குரல்

எம் தேசக்காற்றோடு கலந்து நின்று தமிழீழ விடுதலை இலட்சியத்தை வென்றெடுத்து வானை சூடும் வரை தமிழர் எம் மனங்களில் மதி உரையால் உறுதியுடன் வழி காட்டி நின்ற தேசக்குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அண்ணரின் இழப்பு எம் தேசியத் தலைவரையும், தளபதிகளையும், போராளிகளையும், தாய் மண்ணை நேசிக்கின்ற தாயகத்து உறவுகளையும், புலம் பெயர் வாழ் தொப்புள் கொடி உறவுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தேசியத்தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து விடுதலை வீச்சுக்களையும் மூச்சுக்களையும் பேச்சுக்களாக்கி உலக அரங்கில் தமிழர்களின் உரிமைக்குரலை உரத்து முழக்கமிட்டு திம்பு முதல் ஜெனிவாவரை ஈழத்தமிழருக்கு தனியரசே சரியான தீர்வென்று தனது மதியுரையால் இராஜதந்திர அரசுகளுக்கு விளக்கவுரை தந்தவர்.

தலைவரின் கரம் பற்றிய இலட்சியவாதி. இவர் தான் கரம் பற்றிய துணைவி அடேல் அன்ரியையும் தன் பணிக்கு ஒத்திசைவாக தாயக விடுதலையின் போராளியாக இணைத்துச் சென்றவர். வரலாற்று ஓட்டத்தில் அடேல் அன்ரி அவர்கள் பாலசிங்கம் அண்ணரின் துணைவியார் மட்டுமல்ல எம் தாயகத்தை மீட்கும் எங்கள்மக்களை அன்பு செய்யும் அன்ரியாகவும் நிறைந்து நிற்கின்றார்.

எமது தாயகத்தின் விடுதலை வரலாற்றில் தனிமனித சரித்திர நாயகனை நாம் இழந்து நிற்கின்றோம். இவரின் இழப்பில் இருந்தும் நாம் நிமிர்ந்து நிற்போம். பாலா அண்ணர் விட்டுச் சென்ற பணியை முன்னெடுத்து எம் தேசியத்தலைவன் தமிழீழம் வென்று வானை சூடும் நாளில் மாவீரர் கனவுகள் நனவாகும் வேளையில் எங்கள் தேசமே எழுந்து சென்று பாலா அண்ணரின் பாதங்களில் ஈழமதை காணிக்கையாக்கி நாம் அனைவரும் அவரிற்கு வீர வணக்கம் செலுத்துவோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப் புலிகள்
இத்தாலிக்கிளை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தேசத்தின் குரலுக்கு எமது கண்ணீர் வணக்கங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்த தமிழீழத்தின் தத்துவ ஆசான் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவைக் கேட்டு துயர் அடைகின்றோம்.

பாலண்ணை அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மதியுரைஞராகவும் அரசியல் ஞானியாகவும் தத்துவ ஆசானாகவும் உலகத் தமிழர்களிடையே நன்மதிப்பை பெற்றவர்.

கடந்த 30 வருடங்களாக தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையின் குரலாய் செயற்பட்டு அரசியல் இராஜதந்திரத்தில் அயராது உழைத்தும் தனக்காக வாழாமல் தன் இனத்திற்காக வாழ்ந்தவர்.

இறுதிவரை விடுதலை வேட்கையுடன் நின்ற தேசத்தின் குரல் இன்று எம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரின் சுதந்திர வேட்கை வெற்றி பெற உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைவோம்.

தமிழீழ தேசத்தின் தத்துவ ஒளியாய் விளங்கிய மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு மலேசியா வாழ் தமிழ் மக்களின் கண்ணீர் வணக்கங்கள்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"

உலகத் தமிழர் இயக்கம்
மலேசியா.





தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# *Liberation Tigers of Tamil Eelam*

## வீரவணக்கம்

எங்கள் தேசத்தின் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. தமிழினத்தின் விடுதலைக்காய் பல போராட்ட அமைப்புக்கள் தோன்றிய ஆரம்பகாலகட்டத்தில் உண்மையான விடுதலை அமைப்பையும் நல்வழிகாட்டும் அர்ப்பணிப்புள்ள தலைமையையும் இனங்கண்டு மூன்று தசாப்தங்களாக தேசியத்தலைவருக்கு உறுதுணையாகவிருந்து அரசியல், இராஜதந்திரத்தில் தமிழின விடுதலைக்குப் பலம்சேர்த்த பாலா அண்ணையின் மறைவு முழுத்தமிழினத்திற்குமே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

சாவு அனைவருக்கும் வரும். இது இயற்கை. அதை நாம் என்றோ ஒருநாள் சந்தித்துத்தான் ஆகவேண்டும். இது தவிர்க்கமுடியாதது. ஆனால், சிங்கள அரசபயங்கரவாதத்திற்கு எதிராக, தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தமிழர்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரசபயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்தை பயங்கரவாத முலாம்பூசி சிங்கள அரசானது அனைத்துலகில் பரப்புரை செய்து வரும் இவ்வேளையில், சமாதானம் தோற்றுப்போய், பிரிந்துசென்று தனியாக அமைப்பதே தமிழினத்திற்கு இன்று இருக்கும் ஒரேவழியென தீர்க்கமாய் முடிவெடுத்து தமிழினம் ஓரணியில் நிற்கும் இவ்வேளையில், பாலா அண்ணையின் பணி இன்னும் அதிகமாய் எமக்குத் தேவையாய் இருக்கையில் இவ் இழப்பை எம்மால் ஏற்க முடியவில்லை.

இன்று ஆறாப் பிரிவுத்துயரில் தவிக்கும் முழுத்தமிழினத்தோடும் நாமும் இணைந்து கொள்கின்றோம். எம் கண்ணீரை அவருக்கு காணிக்கையாக்குகின்றோம். எம்மிடம் பாலா அண்ணை விட்டுச்சென்ற பணிதொடர்ந்து தமிழீழம்காண அயராது உழைப்போம் என அவர்மீது உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப்புலிகள்
நெதர்லாந்துக்கிளை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

நெருப்பாற்றிலே பயணம் செய்து கொண்டிருக்கும் எமது விடுதலை போராட்ட கப்பலின் திசை காட்டியாகவும், எமது தேசத்தின் குரலாகவும் இருந்த பாலா அண்ணாவுக்கு எமது கிளையின் வீரவணக்கங்கள். மயான அமைதியிலும் ஆர்ப்பரிக்கும் பேரா வேளைகளிலும் எமது விடுதலை பயணத்திற்கு துல்லியமாக வழிகாட்டியவர் பாலா அண்ணா அவர்கள்.


எமது தேசத்தை பீடித்திருந்த பந்து நோயின் வைத்தியராக இருந்த உங்களையே இந்நோய் எம்மை விட்டு பிரித்து விட்டது. யார் யாரை தேற்றுவதென்றறியாமல் ஒட்டுமொத்த தமிழினமுமே கலங்கி தவிக்கிறது. எனினும் இழப்புக்கள் மூலம் எமது தேசத்தின் விடுதலை தாகத்தை குறைத்து விட முடியாது. மாறாக எமது இனம் இன்னும் புதுப்பலம் கொண்டு எழும். நீங்கள் விட்டுச் சென்ற பணியை தொடர உங்களின் விடுதலை வேட்கையின் மேல் உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப்புலிகள்
நியூசிலாந்துக்கிளை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழின் சட்டமே - எம்
தலைமுறைக்கோர் அண்ணனே!
மலரும் விடுதலையின்
மதியுரைத்த புத்தகமே!

முல்லைக்கு விடுத்த தேராய்
மொய்த்து நாங்கள் ஏறி
உன்மேல் - எம்
எல்லை வரை சென்று
விடுதலை ஏந்தி வரக்
காத்திருந்தோம்.

உன் தோளில் சாய்ந்து
துயர் மறந்த கொடிகள்- இங்கு
துவண்டழுது துடிக்குது பார்!
உன் காலைப் 'பற்றி' நின்று
கண்திறந்த தளிர்கள் இங்கு
வேரறுந்த வலியால்
வெம்பி வெம்பி மருகுது பார்!

இத்தனை ஆண்டுகள்
இல்லாமல் போயிருந்த - எம்
தேசத்தின் எல்லைகளை
பேசவைத்த வீரத்தின்
மறுபக்கம் நீ!

வாளை வீசிப்பார்த்தான்
வலிமை புரிந்து கொண்டான்
பேசிப்பார்த்தால் ?
கூவியழைத்தான் கோழை
குழறி எழுந்து நீ
கொட்டிய வாதங்களில்
எதிரி கூட அன்று
இனி பேச்சில்லை
என்றான்!

சட்டத்துள் ஓட்டை வைத்து
சாதிக்க நினைத்த மாற்றான்
திட்டத்துள் விழுந்திடாமல்
தினம் எமைக் காத்துநின்றாய்.

பேச்சுக்கு நீ வந்தால்
பெருஞ் சிக்கல் தமக்கென்று
மூச்சு வாங்க பார்த்திருந்த
மூன்றாம் தரப்பும்
அழுகிறது! பார்

பக்கத்து நாடுகளின் -
பாசாங்குப் பேச்சுக்களில் -
சிக்கலைத்துத் தேசத்தை
சின்னாபின்னமாக்க
நாளும்

# நீ ஓய்ந்து விடவில்லை...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அக்கறையோடுழைத்து
அம்மணிதரும் அழுகிறார்
பார் !

அன்பனே !
தந்தையே
அயராது எழுந்து வா !
ஏமாற்றும் முடிவோடு
எல்லோரும் வருகிறார்
எழுந்து வா !
எம்
எல்லைத் தடிகளை
எடுத்து
எங்கோ எறிகிறார்
எழுந்து வா !
தலையறுந்தாலும்
தமிழதையே உன்
பேச்சில்
உயிர் எழுந்து
ஓடுவோம்
எழுந்து வா !

தலைவன் அழுகிறான்
தந்தையே ஓடிவா
மண்ணுள் வித்தான

மாவீரன் கேட்கிறான்
'மதியே ஓடிவா !

நீ ஓய்ந்து விடவில்லை -
உண்மை இருக்கும் வரை
நீ - ஓயவில்லை -
உந்தன் சொல்
வன்மை இருக்கும் வரை
நீ - ஓயவில்லை

ஏனெனில் -
நீ தமிழ்
'தேசத்தின் குரல்'

- திருச்சிலாந்துக்கிளை -



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தமிழீழத்தின் தத்துவ ஒளியாய் விளங்கிய மதியுரைஞர் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர் வணக்கங்கள்!

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக அயராது உழைத்து, அதன் வீச்சுக்கு வலுச்சேர்த்த தத்துவத் தூணை இழந்து இன்று தமிழினம் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளது.

உலகத் தமிழினத்தைத் நிமிரவைத்த தலைவரின் குரலைப் ஒலித்து, அவருக்குத் தோள்கொடுத்து போராட்டத்தை முன்னகர்த்திய ஆற்றல்மிகு அரசியல்-இராஜதந்திர ஆசான் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

கூர்மதி மிகு கொள்கைவழிப் பாதை வகுத்து இணையற்ற களப்பணி ஆற்றியவர்.

பிரிந்தது தனிமனித உயிரல்ல. விடுதலையை அவாவி நிற்கும் இனத்தின் குரலொன்று அடங்கிவிட்டது. உன்னத இலட்சியங்களுக்காக வாழ்ந்தவர்களை சாவு அழிப்பதில்லை. தமிழின வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலும் 'பாலா அண்ணை' என்ற எங்கள் தேசத்தின் தத்துவ விளக்கு நிலைத்து நின்று ஒளிரும்.

தமிழீழ தேசத்தின் தத்துவ ஒளியாய் விளங்கிய மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு, நோர்வே வாழ் தமிழ் மக்களின் கண்ணீர் வணக்கங்களைக் காணிக்கையாக்கி, அவர் விரித்து நின்ற உன்னத இலட்சியத்தை வென்றெடுக்க உறுதியெடுத்துக் கொள்கிறோம்!!

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழீழ விடுதலைப்புலிகள்
நோர்வேக்கிளை



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தோப்பாகி நின்ற தனிமரம்

காற்று
விரைவாக அந்தச் செய்தியை
காவித் திரிந்தது.
பாலா அண்ணா
மரணித்து விட்டார்
மூன்று தசாப்தமாய்
விடுதலைப் போருக்கு அரசியல் வடிவம் கொடுத்த
அற்புத மனிதத்துடிப்பு அடங்கிவிட்டது
ஒரு ஆளுமைத்திரள்
அடையாளமாகி விட்டது
தோப்பாகி நின்ற தனிமரம்
சரிந்து விட்டது.
இந்த இடைவெளி,
இப்போது...
இட்டு நிரப்ப மு டியாதது.

பாலா அண்ணா !
நண்பனாய், போராளியாய்
ஆசிரியக்குருவாய், ஆலோசகராய்
அதற்கு மேலாய் அதி உன்னத மானிடனாய்
வரலாற்றில் வடிவான வரலாறு
அரசியல் களம் என்பது
அடுத்த ஒரு போர் அரங்கு.
பகைவரை நண்பரை
பகுத்தறிய கடினமான ஆடுகளம்
ஆனாலும்....

அரசியல் மேசையிலும்
போர் செய்தவன் நீ
போர் அரங்கிலும்
அரசியல் செய்தவன் நீ
இந்த இடைவெளி,
இப்போது.....
இட்டு நிரப்ப முடியாதது.

இறக்கைகளுள் குண்டு மறைத்து
கால்களில் ஒலிவ் கிளை பற்றி
மானிடம் பாடும் வல்லூறுகள்
விரிக்கும் வலைப்பின்னலில்
தாயகம் சிக்காது தடுத்தவன் நீ!
விடுதலைப் போராட்டங்களுக்கு
பயங்கரவாத வர்ணம் பூசும்
சர்வதேச அரசியல் சதுரங்கத்தில்
தமிழீழக் காய்களை
சாதுரியமாய் நகர்த்திய
அசாதாரண அரசியல் போராளி
பாலா அண்ணா !

இந்த இடைவெளி
இப்போது
இட்டு நிரப்ப முடியாதது

- தமிழீழ விடுதலைப்புலிகளின் நோர்வேக் கிளை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - தென் ஆபிரிக்கா
TAMIL CO-ORDINATING COMMITTEE OF SOUTH AFRICA

## South Africans Mourn the Loss of "The Voice of The Tamil Nation"

The passing away of Anton Balasingham, political advisor, theoretician and the chief negotiator of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) for the last three decades, is an irreplaceable loss to all supporters for peace and freedom from oppression. Mr Balasingham, an Academic and expert Political Analyst, was revered and trusted by the Eelam Tamils for his total commitment and selfless resolve for the liberation of his people by negotiation with the Sri Lankan Government.

He was always the voice of reason and objective thinking both on the side of the oppressed and the oppressor. The death of Anton Balasingham is an irreparable loss to the Sri Lankan Tamil liberation struggle and the Government of Sri Lanka. An eminent academic and political commentator, Prof. HL Peiris, recently said ' Balasingham's loss will be a greater loss to the Sinhalese than the Tamils.

Mr Balasingham was intimately involved in almost all the peace talks between the LTTE and the Government of Sri Lanka, from 1986 to February 2006. Due to his poor health he was unable to attend the last round of peace talks in Geneva in 2006. In a recent interview by Tamilnet, about two weeks before his death, Mr Balasingham expressed his disappointment and frustration at being incapacitated by his illness, to advise and represent the Eelam Tamils at the negotiating table. Such was his passion and love for his people.

In a moving tribute, the Leader of the LTTE, Mr Velupillai Pirabaharan, described Mr Balasingham as a source of unwavering strength and the light of the Tamil nation. The LTTE leader was greatly inspired by the elder



Tamileelam Archive

Balasingham and trusted him explicitly on all matters. In recognition for his selfless service to the Tamils at government and international levels, the LTTE leader bestowed the title' Voice of the Nation' on Balasingham. There is no doubt that Balasingham will always be remembered with love and appreciation by the Tamil Nation as an individual who had a strong influence in shaping the destiny of the people of island of Sri Lanka. He has a special place in the hearts of the Tamils, in particular, whom he encouraged, advised and stood with, in their struggle for a better life.

The officials and members of the Tamil Co-ordinating Committee of South Africa convey our deepest condolences to Mrs Balasingham and the Tamils of Tamil Eelam on the loss of a beloved husband, friend and advisor. Our thoughts are with you in your time of bereavement and our fervent wish is that the road ahead is not a difficult one.

**Tamil Co-ordinating Committee of South Africa**



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

## இதயங்கள் தூவும் மலர் அஞ்சலிகள்

விடுதலைக்காய்த் தன்னை அர்ப்பணித்த விருட்சமொன்று சாய்ந்து விட்டது இன்று. ஓர் உன்னத எழுத்தாளனாய், ஊடகவியலாளனாய், தத்துவாசிரியனாய், மூத்த அரசியல் போராளியாய் பல பரிமாணங்களில் தன்னை அடையாளப்படுத்திய எம் தேசத்தின் குரல் மௌனமாய் உறங்கிவிட்டது. வரலாற்றுப் பணியைத் தன் தோள் மீது சுமந்து தேசிய, சர்வதேச ரீதியில் தமிழரின் அமைதிக்காய் பறந்து திரிந்த அமைதிப்புறா இன்று மீளாத்துயில் கொள்கிறது.

பாலா அண்ணா! எம் உணர்வுகளோடும் உதடுகளோடும் ஒன்றுபட்டு நினைத்து வாழ்வார். தமிழீழ வரலாற்றில் ஓர் அத்தியாயம் அவருக்காய் எழுதப்பட்டுப்போகிறது. உடல்மட்டும் தான் எம்மை விட்டுப் பிரிந்து போனது. இறுதி மூச்சுவரை தமிழ் இனத்துக்காகத் துடித்த அந்த தேசத்தின் குரல் மட்டும் தூங்கி விடவில்லை. அந்த அற்புதக் குரல் என்றும் எம் தேசத்தின் குரலாய் ஒலித்துக்கொண்டேயிருக்கும்....

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப்புலிகள்
சுவீடன் கிளை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# *Liberation Tigers of Tamil Eelam*

நாம் வலியவர்கள் -
வீழ வீழ எழுவோம்....  ஒன்று வீழ ஒன்பதாய்
இழப்புக்களிலிருந்து புதிதாய் எழுவோம்...
இடைவெளிகளில் ஆயிரம் பேர் அணிவகுப்பர்.....

எந்தவித வார்த்தைகளுக்குள்ளும் துயரங்களாய் நெருடி ஆறுதலடைய முடியாததுமாய் எங்கள் பாலா அண்ணையின் மரணச் செய்தியில் தமிழினம் துவண்டு போய் நிற்கின்றது. அரசியல் போர்க்களத்தில் வீரஅரிமாவாய், தலைநகரங்களிலான சந்திப்புகளில் எங்கள் தமிழினத்தின் பலத்த குரலை ஓங்கி ஒலித்தவரை மரணம் பறித்துப் போயிற்று. தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். எமது தாயகம் விடுதலை பெற வேண்டும். எந்தச் சலுகைச் சதிக்குள்ளும் நாம் அமிழ்ந்து போக முடியாது என்பதில் எந்த விட்டுக் கொடுப்பும் இல்லாமல் வீறு நடை போட்ட பிதா மகனை நாம் இழந்து நிற்கின்றோம். துயர வெளியில் தவித்துப் போய் நிற்கின்றோம். தமிழீழத் தேசம் ஒரு மூத்த தலைமகனை இழந்து தவிக்கின்றது.

வீறு கொண்டு எழுந்து நிற்கும் எமது போராட்ட வரலாற்றின் ஒவ்வொரு பக்கங்களிலும் பாலா அண்ணையின் பெயர் எழுதப்பட்டிருக்கின்றது. திம்பு தொடக்கம் ஜெனீவா வரை அரசியல் பேச்சு மேசைகளில் பாலா அண்ணை வகித்த பாத்திரம் அளவிட முடியாதது. அந்த ஆற்றல், அரசியல் ஞானம், இராசதந்திரம், மனவலிமை, வாதத் திறமையென எல்லாக் குணங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு மாபெரும் மேதை. எதிரி விரிக்கும் ஒவ்வொரு பொறிக்கும் தப்பி எங்கள் இனத்தின் இறுதி இலக்கை அடைவதற்கான காய்களை தந்திரமாக நகர்த்திச் சென்ற அரசியல் சாணக்கியன். இன்று அவர் எம்முடன் இல்லை. விடுதலைக்கான வழிகளைத் திறந்து விட்டு நினைவுகளை எம் நெஞ்சங்களில் நிரப்பிவிட்டு மரணத்துள் உறங்கிப் போனார் எங்கள் பாலா அண்ணை. தமிழீழம் என்ற பெயர் இருக்கும் வரை, தமிழினம் என்பது வாழ்ந்து கொண்டிருக்கும் வரை பாலா அண்ணையின் பெயரும் இணைபிரியாது இருக்கும்.

[illegible] பாலா அண்ணனுக்குமான உறவு தந்தைக்கும் தனயர்களுக்குமான உறவு, தாய்க்கும் அவளின் குழந்தைகளுக்குமான உறவு. அத்தகைய அந்த உறவின் நினைவுகளில் மூழ்கி ஒவ்வொரு போராளிகளும் செயற்பாட்டாளர்களும் பொதுமக்களும் துவண்டு போயுள்ளோம். ஒவ்வொரு முறையும் பாலண்ணை எங்களிடம் வரும்போது அவர் வரும் நோக்கத்துக்கும் அப்பால் அவருடன் பழகக் கிடைக்கக் கூடிய அந்த நேரத்துக்காக நாம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

நாம் வலியவர்கள் -
விழ விழ எழுவோம்.... ஒன்று விழ ஒன்பதாய்
இழப்புக்களிலிருந்து புதிதாய் எழுவோம்...
இடைவெளிகளில் ஆயிரம் பேர் அணிவகுப்பர்.....

எந்தவித வார்த்தைகளுக்குள்ளும் துயரங்களைச் செருகி, ஆறுதலடைய முடியாதபடியாய் எங்கள் பாலா அண்ணையின் மரணச் செய்தியில் தமிழினம் துவண்டு போய் நிற்கின்றது. அரசியல் போர்க்களத்தில் வீரஅபிமன்யுவாய், தலை நகரங்களிலுள்ள சபைகளில் எங்கள் தமிழினத்தின் பலத்த குரலாய் ஒலித்தவரை, மரணம் பறித்துப் போயிற்று. தமிழினம் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். எமது தாயகம் விடுதலை பெற வேண்டும். எந்த எஜமானர் சகதிக்குள்ளும் நாம் அமிழ்ந்து போக முடியாது என்பதில் எந்த விட்டுக் கொடுப்பும் இல்லாமல் வீறு நடை போட்ட பெரு மகனை நாம் இழந்து நிற்கின்றோம். துயர வெளியில் துக்கித்துப் போய் நிற்கின்றோம். தமிழீழத் தேசம் ஒரு மூத்த தலைமகனை இழந்து தவிக்கின்றது.

வீறு கொண்டு எழுந்து நிற்கும் எமது போராட்ட வரலாற்றின் ஒவ்வொரு பக்கங்களிலும் பாலா அண்ணையின் பெயர் எழுதப்பட்டிருக்கின்றது. திம்பு தொடங்கி ஜெனீவா வரை அரசியல் பேச்சு மேசைகளில் பாலா அண்ணை வகித்த பாத்திரம் அளவிட முடியாதது. அந்த ஆற்றல், அரசியல் ஞானம், இராசதந்திரம், மௌனம், தனித் திறமையென எல்லாக் குணங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு மாபெரும் மேதை. எதிரி விரிக்கும் ஒவ்வொரு பொறிக்கும் தப்பி எங்கள் இனத்தின் இறுதி இலக்கை அடைவதற்கான காய்களை தந்திரமாக நகர்த்திச் சென்ற அரசியல் சாணக்கியன் இன்று அவர் எம்முடன் இல்லை. விடுதலைக்கான வழிகளைத் திறந்து விட்டு நினைவுகளை எம் நெஞ்சங்களில் நிரப்பிவிட்டு மரணத்துள் உறங்கிப் போனார் எங்கள் பாலா அண்ணை. தமிழீழம் என்ற பெயர் இருக்கும் வரை, தமிழினம் என்பது வாழ்ந்து கொண்டிருக்கும் வரை பாலா அண்ணையின் பெயரும் இணைபிரியாது இருக்கும்.

சுவிஸ் கிளைக்கும் பாலா அண்ணனுக்குமான உறவு தந்தைக்கும் தனயர்களுக்குமான உறவு. தாய்க்கும் அவளின் குழந்தைகளுக்குமான உறவு. அற்புதமான அந்த உறவின் நினைவுகளில் மூழ்கி ஒவ்வொரு பொறுப்பாளர்களும் செயற்பாட்டாளர்களும் போராளிகளும் துவண்டு போயுள்ளோம். ஒவ்வொரு முறையும் பாலாண்ணை எங்களிடம் வரும்போது அவர் வரும் நோக்கத்துக்கும் அப்பால் அவருடன் பழகக் கிடைக்கக் கூடிய அந்த நேரத்துக்காக நாம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஏங்கிக் கிடந்திருக்கின்றோம். அந்த ஆலமரத்தின் அடியில் ஒரு நேரம் எனினும் இளைப்பாறக் கிடைக்காதா எனத் தவம் கிடந்திருக்கின்றோம். இயற்கை நீதான அவரின் அளப்பரிய இரசனையும் நகைச்சுவை உணர்வும் இலக்கிய ஈர்ப்பும் எல்லையற்றிருக்கும் மேலாக உரிமையுடனான அந்தக் கண்டிப்பும் எங்களைச் சூழ்ந்திருந்த வேளைகள் அற்புதமானவை. எங்கள் பாலா அண்ணன் இங்கு வந்து திரும்பும் வரைக்கும் அவரைச் சூழ்ந்திருக்கும் காந்த வளையத்துள் நாம் அகப்பட்டு நின்ற நாட்கள் மறக்க முடியாதவை.

பாலா அண்ணனின் மரணத்தின் மேலால் எந்தப் புதிய உறுதி மொழியும் எடுத்துக் கொள்ள மாட்டோம். அவர் வாழும் போதே எங்கள் இலக்கை அறிவித்துச் சென்று விட்டார். அந்தப் பெருமகன் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கிறோம்.. அவருடன் வாழ்ந்திருக்கிறோம்... என்ற ஆங்காரத்துடன் அவர் காட்டிய இலக்கை அடைய வீறுநடை போடுகிறோம்.

உலகம் முழுவதும் வீசும் துயரக் காற்றில் எங்கள் மூச்சையும் இணைக்கிறோம். ஒவ்வொருவர் காயங்களையும் பற்றி ஆறுதல் படுத்துகிறோம்.

இருந்தும்... இதயம் வெடித்துக் குலுங்குகிறது...

இரணைமடுக் குளக்கட்டில் நின்று போராளிகள் சொல்வார்கள்: "இதில தான் பாலா அண்ணை வந்து இறங்கினவர். அண்ணை நீண்ட நேரத்துக்கு முன்னமே வந்து காத்திருந்து கைபிடித்து வரவேற்று கூட்டி அணைச்சவர்".

உங்களுக்குத் தாயாகவும் நீங்கள் தாயாகவும் இருந்த எங்கள் அண்ணன், இந்தப் பேரிடி கேட்டுக் கலங்கி அழுது துயரம் அறிவித்தவேளை நாங்கள் எங்ஙனம் இருந்தோம். இதயம் நொருங்கி காட்டாற்று வெள்ளம் போல கண்ணீர் ஓடுகிறது அண்ணா.

நாம் வலியவர்கள் தான்
வீழ வீழ எழுவோம்..... ஒன்று வீழ ஒன்பதாய்....
இழப்புக்களிலிருந்து புதிதாய் எழுவோம்.....
இடைவெளிகளில் ஆயிரம் பேர் அணிவகுப்பர்....

இருந்தும்.... பாலா அண்ணா நீங்கள் எம்முடன் இல்லை.
போய் வாருங்கள்.... நெடிய துயில் கொள்க......

" புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

தமிழீழ விடுதலைப்புலிகள்
சுவிற்சர்லாந்துக் கிளை

# புதிய வரலாறு படைத்தவன் பூப்படுக்கை போட்டு தூங்குகிறான்

ஈழத்தமிழரின் ஈடு இணையிலா
இதயம் அறுந்தது
தானைத்தலைவன் தமிழ் முடி
தாங்கிய தத்துவ கலசம்
தமிழுடன் கலந்தது

வாகை சூடிய வண்டமிழ் ஈழம்
வாய்திறந்தழுதது
கலசம் ஏந்திய காவிய நாயகன்
கடல்கடந்து காவியமாகினான்

அமுத மொழியினால்
அனைத்துலகிலும்
அரியணை ஏற்றவன்
அடிமைகொள் இங்கிலாந்தினில்
இறந்து கிடக்கிறான்
ஈழத்தமிழரின் இதயஒலி எலாம்
இவன் புகழ் பாடும்

எதிரிகள் கூட இவன் புகழ்பாட
இன்று எழுந்தனர்
சூரியத் தேவனின் சுடர்ஒளி இன்று
சுதந்திர பூமியை காண்பதற்காக
உடல் விட்டு தாவி
உலகினில் பறந்தது
உயரிய தேசத்தின்
ஆத்மாவாய் கலந்தது

விண்ணிலிருந்து பார்க்கும்
விடுதலைப்பூமியை
குறுந்தாடிக் கிழவன்
குவலய தமிழரின்
இதயத்தில் பார்ப்பான்


ஆலமரம் அடியோடு அறுந்தது
ஆயினும்
அதன் விழுதுகள் எல்லாம்
விடுதலை பண்ணைதைப்பாடி
பாலா அண்ணனின் புகழ்
அதைக்கூறும்

தத்துவ ஞானி தமிழுடன் கலந்தான்
தலைவன் இவனை
தமிழ்தேச பிதாவாய்
தமிழ் தேசத்தின் ஞானமாய் ஆக்கினான்
தேசபிதா இவனை நாமும்
தினம் தினம் போற்றுவோம்.

- தமிழீழ விடுதலைப்புலிகள்
- கபிஸ் கிளை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ விடுதலைப் போராட்ட தத்துவாசிரியரும் மதியுரைஞரும் தமிழீழத் தேசத்தின் குரலுமான பாலா அண்ணாவின் மறைவு அனைத்துலக அரங்கில் உலகத்தமிழர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். சிங்கள அரச இயந்திரத்தின் பௌத்த மேலாதிக்க - இனவாத அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புகள், இன அழிப்பு நடவடிக்கைகள், அடாவடித்தனங்கள், அரசியல் மோசடிகள் அனைத்தையும் உலக அரங்கில் உறுதியோடும் உரத்தோடும் உரிமையோடும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி உலகின் நியாயமான பார்வையையும் பரிசீலனையையும் வேண்டிநின்ற தமிழ்த் தேசத்தின் உண்மை உள்ளத்தை இழந்து நமது இனம் இன்று ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளது.

எமது தலைவரின் உற்றதோர் உறவாக, தத்துவார்த்த மதியுரைஞராக, அவரோடு விடுதலைப் பாதையில் கரங்கோர்த்து நடந்த பாலா அண்ணாவின் பணிகள் பல துறைகளில் பதிவாகியுள்ளன. ஒரு படைப்பாளனாகவும், ராஜதந்திரியாகவும், விரிவுரையாளனாகவும், அரசியல் விஞ்ஞானியாகவும், மானிட சமூகவியல் ஞானியாகவும், பொதுவுடைமைச் சிந்தனையாளனாகவும் பிரித்தானியாவில் விரிவடைந்த பாலா அண்ணாவின் வாழ்வின் செந்நெறி எமது தலைவரோடும் தாயகத்தோடும் ஒரு நெருக்கமான, ஒரு மேலான இலக்கு நோக்கிய இலட்சிய உறவாகப் பரிணமித்திருந்தது.

மனித நேயத்தின் மைல் கல்லாக விளங்கும் உலகத் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டச் சகாப்தத்தின் நுழைவாயிலில் நிற்கும் எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியில் பாலா அண்ணாவின் பங்கு அளப்பரியது. தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் தமிழீழ தாயக, தேசிய, வரலாற்று நம்பிக்கைகளுக்கும் அவை குறித்த அவரது தீர்க்க தரிசனப் பார்வைகட்கும் ஒப்ப, தமது தத்துவக் கோட்பாடுகளைத் வகுத்து, எமது மக்களின் ஒட்டுமொத்தமான அபிலாசைகளை வெளிப்படுத்தியவர் எங்கள் பாலாண்ணா அவர்கள்!

மேற்குலகின் பார்வைகளையும் கிழக்குலகின் செயற்பாடுகளையும் மிகவும் தீர்க்கமான, யதார்த்தமான, உறுதியான தனது கணிப்புக்களின் மூலம் எதிர்கொண்டு இறுதிவரை உலகத்தமிழ் மக்களை உற்சாகத்தோடு உலகரங்கில் பிரதிநிதித்துவப்படுத்திய பாலா அண்ணா அவர்கள், திம்பு தொட்டு ஜெனிவா வரையும் பேச்சுவார்த்தைகளை நெறியாட்சி செய்து எமது தேசமக்களின் நியாயமான நிலைப்பாடுகளை உலக அரங்கில் உண்மையோடும் உறுதியோடும் முன்வைத்தார்.

வருடாந்தம் மாவீரர் நாளில் எமது தேசியத்தலைவரின் கொள்கைப் பிரகடன உரையைத் தொடர்ந்து, பாலா அண்ணா நிகழ்த்திய விரிவுரைகள் எமது நெஞ்சை விட்டகலாதவை. செவிக்கு இதமாகவும் சிந்தனைக்குப் புதுமையாகவும் பாலா அண்ணா எளிய தமிழில் எடுத்து விளக்கும்போது, உலகத் தமிழினமே உள்ளம் குளிர்ந்து அதனை செவிமடுப்பது ஒரு வழக்கமாகி வந்துள்ளது. தளர்ச்சியைப் போக்கி புத்துணர்ச்சியை ஊட்டும் தன்மை பாலா அண்ணாவின் உரையாற்றலின் ஒப்பற்ற தன்மையாகும். எழுதாத வரிகளையும், சொற்களின் வரிகளுக்கிடையே புதைந்து கிடக்கின்ற உட்கருத்துக்களையும்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமக்கே உரித்தான பாணியில் எடுத்தியம்பும் பாங்கு அவருக்கே உரித்தான தனிப்பாங்காகும்.

பாலா அண்ணனின் வன்னிப் பயணங்கள் உலகின் பார்வைக்குரிய பக்கங்களாகியுள்ளன. அவரது நூல்கள் வரலாற்றின் பதிவுகளாகியுள்ளன. செவ்விகளும் புதிய சொல்லாடல்களும் உலக ஊடகங்களினால் உள்வாங்கப்பட்டுள்ளன. மேற்கினை மேற்கின் பாணியோடு நின்று முகங்கொடுக்கும் பலமும் பரிச்சயமும் பாலா அண்ணனுக்குப் புதிதாக என்றுமே இருந்ததில்லை. பாலா அண்ணா எமது உள்வீட்டு உறவாக உருவெடுத்தவர். புழுதியிலும் குண்டு மழையிலும் எமது விடுதலை வீரர்களோடும் தான் நேசித்த மக்களோடும் கூடவே வாழ்ந்தவர்.

மிகவும் ஆழ்ந்த புரிந்துணர்வும் அரசியற் பார்வையும் கொண்ட இவரது துணைவியார் அடேல் அவர்களின் கருத்தொருமித்த ஆதரவோடும் அயராத உழைப்போடும் என்றுமே சலிக்காத பராமரிப்போடும் எமது தாயக மக்களின் தணியாத தாகங்களுக்கு உருவம் கொடுத்தவர் எங்கள் பாலா அண்ணன். உடல் நலங்குன்றிய வேளையிலும், அவரது தேசப்பணியும் பற்றும் குன்றவும் இல்லை குறையவும் இல்லை என்பது உலகுள்ளவரை நிலைத்திருக்கும்.

மேற்குலகச் சுகபோகங்களையெல்லாம் துறந்து, தாயக மக்களின் வளவாசத்திலும் எமது வீர மறவரின் விடுதலை வாழ்விலும் பங்குகொண்டு, தேசியத்தலைவரின் பக்கத்திலிருந்து பலங்கொடுத்தவர் பாலா அண்ணன் அவர்கள். இத்தகைய பேருள்ளத்தின் மறைவு எம்மைப் பெருந்துயரில் பேதலிக்க வைத்துள்ளது. இருப்பினும் அவரது பணிகளும் பலமும் எம்முன் ஒரு விசையாகவும் சக்தியாகவும் ஆன்ம வலிமையாகவும் மீளுருப்பெற்று எம்மை வழி நடத்திக்கொண்டே இருக்கும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை.

பசியோடும் பட்டினியோடும் சிங்கள ஆயுதப் படைகளின் படுகொலைகளினோடும் பொறுத்த பேரினவாத அரசின் எறிகணை - வான்வழிக் குண்டுத்தாக்குதல்களோடும் காலத்துக்குக் காலம் இனப் படுகொலைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டும் தமது விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற எமது தாயக மக்களுக்கு, பாலா அண்ணனின் மறைவினால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்யவேண்டிய முழுப்பொறுப்பும் புலம் பெயர்வாழ் தமிழ் மக்களின் மீது இன்று சுமத்தப்பட்டுள்ளது.

பாலா அண்ணா, தன்னை வருத்தி, நேர்மையோடும் சுமந்து நின்ற தேசப் பணியினை எம் தோள்மீது சுமந்து, இலக்கு நோக்கிய எமது பயணத்தை சத்தியப்பாதையில் தொடர்வோமாக!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

பிரித்தானிய தமிழ் ஒன்றியம்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசத்தலைவனின் தத்துவ முழக்கமாய்
தமிழர் தாயகப் புத்தக விளக்கமாய்
பாசமக்களின் பாலா அண்ணனாய்
பகைவன் பாசறை தட்டிய சன்னமாய்
ஓயாதுழைத்த ஒருமா மனிதன்
உறங்கிய செய்தியால் உள்ளம் வருந்தினோம்

புலம் பெயர் நிலத்தின் போகங்கள் துறந்து
புண்ணிய பூமியின் தாகங்கள் உணர்ந்து
களங்கண்ட வீரரின் கரங்களில் அணைந்து
காலத்தின் தேவையைக் கடமையாய்த் துணிந்து
நலங்குன்றும் காலையும் நாட்டினை நினைந்து
நல்லதோர் துணையுடன் நற்கடன் புரிந்து
நிலத்தினை மீட்பதே நிரந்தரத்தீர்வென
நம்பிய தமிழனின் நாவோய்ந்து போனது!

இரும்புக் கலையும் இளமென மாற்றி
எல்லா வழியிலும் இயங்கிடும் சிங்கள
அரக்க அரசின் ஆதிக்கவெறியினை
அப்பட்டமாக அம்பலத்துக் குணர்த்திடும்
நெருப்புப் பயணத்தின் தேசக்குரலென
நீதியுரைத்த நாவோய்ந்து போனது!

ஈகங்கள் ஆயிரம் இயற்றிய மக்கள்
இழப்புகள் துயர்களால் இறுகிய மக்கள்..
தாகமும் பசியும் தடைகளும் நெருக்கத்
தவித்திடும் இந்தச் சோதனை வேளையில்...
ஊக்கமும் அறிவின் உச்சத்தனமும்..
உடைய அண்ணனை இன்று நாம் இழந்துளோம்!

எங்கள் இனிய பாலா அண்ணனின்
கனத்த இழப்பால் இதயம் சிவந்து
நொந்து நிற்கின்ற எங்கள் தலைவனின்
துன்பம் தன்னைப் பகிர்ந்திடல் நம்கடன்!

நண்பன் ஒருவனை நல்ல அண்ணனை
அன்பும் உரமும் ஊட்டிய அறிஞனை
இன்று இழந்துள்ளான் எங்கள் தலைவன்!
இனத்தின் விடிவினில் இவன்முகம் தேடுவான்!

மாவீரர் தினத்தில் மேதகு தலைவன்
பேருரை தருவதைப் பேச்சுத்தமிழில்
பூவாய்க் கல்லைப் பூடகமின்றிப்
போட்டுடைக்கின்ற பொலிவான உருவம்!

எழுதாத தமிழை எளிதாகக்கூறி
எங்களை நகைக்க வைத்துரையாற்றியே
விழுதாக நின்ற விசையான தமிழன்
விழிமூடிப்போனது விடியாத கவலை!

ஊடகமெழுப்பும் கூரான கணைகளை
உற்சாகத்தோடு எதிர்கொள்ளும் தகைமை!
சாடியும் தகர்த்தும் சதிகாரர் செயல்களை
சமன் காட்டி நியாயம் நிறுவிடும் திறமை!

நாடது நிமிரும் நேரத்தில் இவரின்
நாவது ஓய்வு பெற்றது கொடுமை!
கூடது நோக்கித் திரும்பிடும் வேளையில்
கூவிய குயிலது போனது கொடுமை!

எழுது கூட நிரம்பிடா வயதில்
எமன் வந்து இவரை எடுத்தது கொடுமை!
பொழுதெலாம் தமிழர் புதுயுகம் நோக்கிப்
பணித்த மனிதன் படுத்தது கொடுமை!
முதுகிற் புரண்டு பொறுக்கிய அனுபவம்
பேசிய மனிதன் போனது கொடுமை!

வேற்று மண்ணில் ஊற்றெடுத்தாலும்
விரும்பியேற்றவன் வாழ்வினில் இணைந்து
நாட்டுப் பண்ணைத்தானும் தானும் இசைத்து
நல்லதோர் துணையாய் நாயகன் வழியில்
கூட்டுப்பணிகள் ஆற்றிய துணைவியின்
ஆறாத் துயரில் நாம் இணைவோமே!

பயங்கரவாத விலங்கினையிட்டுப்
பட்டினிச் சாவினாற் போரிலைக்கிட
இயங்கிடும் சிங்கள இனவாத அரசினைக்
கட்டியணைத்தன காசினியாளர்கள்!
மயங்கிக் கிடக்கும் மதி கெட்ட உலகின்
மயக்கம் தீர்த்திட மனிதவுரி கழித்து
முழங்கிய பாலா அண்ணனின் மறைவினாற்
பரிதவித்துள்ளது எங்கள் பேரினம்!

எனினும் எமது உறுதி போகாது!
எண்ணத்தின் வலிமை ஓய்ந்து போகாது!
இனிய காலம் எமக்கு முன்னுள்ளது!
எதையும் தாங்கிடும் இதயமும் உள்ளது!

பணிய முடியாப் பயணமும் உள்ளது!
பாதை வகுத்திடும் தலைமையும் உள்ளது!
மனிதம் போற்றும் மாவீர மகத்துவம்
மாதவ வேள்வியாய் மண்ணிடையுள்ளது!
கனியும் எங்கள் கனவுகள் யாவும்
காட்சியாய் விரியும் கண்களில் ஈழம்
இனியும் நாங்கள் இரந்திடமாட்டோம்!
இந்த உலகையும் எம் பக்கம் ஈர்ப்போம்!
தனியாம் நமக்கொரு தாயகம் பிறக்கும்!
தமிழன் வாழ்விலும் மேன்மைகள் சிறக்கும்!
குனியா இனத்தின் கொற்றக்கொடியில்
கொள்கை விளக்காய் இவர் முகம் சிரிக்குமே!

தொடரும் பாலா அண்ணனின் பணிகள்!
துகளாய்ப் போகும் பகைவனின் அணிகள்!!

**தொடரும் பாலா அண்ணனின் பணிகள்!**
**துகளாய்ப் போகும் பகைவனின் அணிகள்!!**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசத்தலைவரின் தத்துவ முழக்கமாய்
தமிழர் தாயகப் புத்தக விளக்கமாய்
பாசமக்களின் பாலா அண்ணனாய்
பகைவன் பாசறை தட்டிய சன்னமாய்
ஓயாதுழைத்த ஒருமா மனிதன்
உறங்கிய செய்தியால் உள்ளம் வருந்தினோம்

புலம் பெயர் நிலத்தின் போகங்கள் துறந்து
புண்ணிய பூமியின் தாகங்கள் உணர்ந்து
களங்கண்ட வீரரின் களங்களில் அணைந்து
காலத்தின் தேவையைக் கடமையாய்த் துணிந்து
நலங்குன்றும் காலையும் நாட்டினை நினைந்து
நம்மவோர் துணையுடன் நற்கடன் புரிந்து
நிலத்தினை மீட்பதே நிரந்தரத்தீர்வென
நம்பிய தமிழனின் நாவோய்ந்து போனது!

இருப்புக் கலையும் இனமென மாற்றிட
எல்லா வழியிலும் இயங்கிடும் சிங்கள
அரக்க அரசின் ஆதிக்கவெறியினை
அப்பட்டமாக அம்பலத்துக் குணர்த்திடும்
நெருப்புப் பயணத்தின் தேசக்குரலென
நீதியுரைத்த நாவோய்ந்து போனது!

ஈகங்கள் ஆயிரம் இயற்றிய மக்கள்
இழப்புகள் துயர்களால் இறுகிய மக்கள்..
தாகமும் பசியும் தடைகளும் நெருக்கத்
தவித்திடும் இந்தச் சோதனை வேளையில்..
ஞானமும் அறிவின் உச்சத்தனமும்..
உடைய அண்ணனை இன்று நாம் இழந்துளோம்!

எங்கள் இனிய பாலா அண்ணனின்
கனத்த இழப்பால் இதயம் சிலிர்ந்து
நொந்து நிற்கின்ற எங்கள் தலைவனின்
துன்பம் தன்னைப் பகிர்ந்திடல் நம்கடன்!

நண்பன் ஒருவனை நல்ல அண்ணனை
அன்பும் உரமும் ஊட்டிய அறிஞனை
இன்று இழந்துள்ளான் எங்கள் தலைவன்!
இனத்தின் விடிவினில் இவன்முகம் தேடுவான்!

மாவீரர் தினத்தில் மேதகு தலைவன்
பேருரை தருவதைப் பேச்சுத்தமிழில்
பூவாய்க் கல்லாய்ப் பூடகமின்றிப்
போட்டுடைக்கின்ற பொலிவான உருவம்!

எழுதாத தமிழை எளிதாகக்கூறி
எங்களை நகைக்க வைத்துரையாற்றியே
விழுதாக நின்ற விசையான தமிழன்
விழிமூடிப்போனது விடியாத கவலை!

ஊடகமெழுப்பும் கூரான கணைகளை
உற்சாகத்தோடு எதிர்கொள்ளும் தலைமை!
சாடியும் தகர்த்தும் சதிகாரர் செயல்களை
சமன் காட்டி நியாயம் நிறுவிடும் திறமை!

நாடது நிமிரும் நேரத்தில் இவரின்
நாவது ஓய்வு பெற்றது கொடுமை!
கூடது நோக்கித் திரும்பிடும் வேளையில்
கூவிய குயிலது போனது கொடுமை!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எழுபது கூட நிரம்பிடா வயதில்
எமன் வந்து இவரை எடுத்தது கொடுமை!
பொழுதெலாம் தமிழர் புதுயுகம் நோக்கிப்
பயணித்த மனிதன் படுத்தது கொடுமை!
புழுதியிற் புரண்டு பொறுக்கிய அனுபவம்
பேசிய மனிதன் போனது கொடுமை!

வேற்று மண்ணில் ஊற்றெடுத்தாலும்
விரும்பியேற்றவன் வாழ்வினில் இணைந்து
நாட்டுப் பண்ணைத்தானும் தானும் இசைத்து
நல்லதோர் துணையாய் தாயகன் வழியில்
கூட்டுப்பணிகள் ஆற்றிய துணைவியின்
ஆறாத் துயரில் நாம் இணைவோமே!

பயங்கரவாத விலங்கினையிட்டுப்
பட்டினிச் சாவினாற் பேரழிவாக்கிட
இயங்கிடும் சிங்கள இனவாதஅரசினைக்
கட்டியணைத்தன காசினியரசுகள்!
மயங்கிக் கிடக்கும் மதி கெட்ட உலகின்
மயக்கம் தீர்த்திட மணித்துளி கழித்து
முழங்கிய பாலா அண்ணனின் மறைவினாற்
பரிதவித்துள்ளது எங்கள் பேரினம்!

எனினும் எமது உறுதி போகாது!
எண்ணத்தின் வலிமை ஓய்ந்து போகாது!
இனிய காலம் எமக்கு முன்னுள்ளது!
எதையும் தாங்கிடும் இதயமும் உள்ளது!

பணிய முடியாப் பயணமும் உள்ளது!
பாதை வகுத்திடும் தலைமையும் உள்ளது!
மனிதம் போற்றும் மாவீர மகத்துவம்
மாதவ வேள்வியாய் மண்ணிடையுள்ளது!
கனியும் எங்கள் கனவுகள் யாவும்
காட்சியாய் விரியும் கண்களில் எழும்
இனியும் நாங்கள் இரந்திடமாட்டோம்!
இந்த உலகையும் எம் பக்கம் ஈர்ப்போம்!
தனியாய் தமக்கொரு தாயகம் பிறக்கும்!
தமிழன் வாழ்விலும் மேன்மைகள் சிறக்கும்!
சூரிய இனத்தின் கொற்றக்கொடியில்
கொள்கை விளக்காய் இவர் முகம் சிரிக்குமே!

தொடரும் பாலா அண்ணனின் பணிகள்!
துகளாய்ப் போகும் பகைவனின் அணிகள்!!

## தொடரும் பாலா அண்ணனின் பணிகள்!
## துகளாய்ப் போகும் பகைவனின் அணிகள்!!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வளம்கொழித்து நிலம்செழிக்கும்
ஈழத்தின் ஒருமூலத்தில்
மொழிமுழங்க மண்சிறக்க
தமிழ்நிமிரப் பிறந்தவனே!

மொழி சிறக்க வழிபிறக்க
உலகெங்கும் ஒலித்தவனே
மணம்கொழிக்க உடல்பதைக்க
எமைவிட்டுப் போனாயே!

தமிழினத்தின் தாகமதை
தமிழனையே தெரியார்க்கு
தெரியவைத்த திருமகனே
மொழிபெயர்த்த பெருமகனே!

தணியாத நினைவோடு
தமிழீழக் கனவோடு
அணையாத விளக்காக

அண்ணா நீ சென்றாயே!
இனியவனாம் திருமகனாம்
ஈழத்தின் பெருமகனாம்
கைப்பிடித்த நாயகியும்
மெய்கண்டு கலங்கியழ
பொய்கொண்ட புத்தசெல்வம்
வியந்தின்று கதைபேச

விண்ணுலகம் சென்றாயே
விம்மியழ வைத்தாயே!

நம்மண்ணின் அவலங்கள்
நம்மவர்கள் துயரங்கள்
அந்நிய தேசமெங்கும்
பக்குவமாய்ச் சொன்னாயே

சொந்தங்கள் சீரான
செந்தமிழும் தானான
வித்திட்ட தலைமகனே
விலையில்லா தமிழ்மகனே
நல்லவனே நம்மவனே
நாவன்மைமிக்கோர் நாயகனே
விரைவினிலே தமிழாளும்
நின்பேரும் அதில்வாழும்!

நம்மண்ணின் விடுதலைக்கு
எம்மினத்தின் விடியலுக்கு
உலகெங்கும் குரல்கொடுத்து
ஓடியோடி உழைத்தாயே!
ஈழத்தில் கொடிபறக்கும்
நாளிங்கு நெருங்கையிலே
வெற்றிக் குரல் கொடுக்க
பாலா அண்ணா நீயெங்கே?


# விரைவினிலே தமிழாளும்! நின்பேரும் அதில்வாழும்!!

வட அமெரிக்க தமிழ் சங்க கூட்டமைப்பு
உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - அமெரிக்கா
உலகத் தமிழர் இயக்கம் - அமெரிக்கா
உலகத் தமிழர் பகலிர் அமைப்பு - அமெரிக்கா
இலங்கைத் தமிழ் சங்கம்
டெலவெயர், புளோரிடா, கலிபோர்னியா, வேர்ஜீனியா
சிக்காகோ, டாலஸ், ஓகயோ)

அமெரிக்க தமிழர் அமைப்பு - நோர்த் கரோலினா, அமெரிக்கா
அமைதிக்கும் ஜனநாயகத்திற்குமான தமிழ் சங்கம் - நியூ யோர்க்
தமிழ் இளையோர் அமைப்பு - அமெரிக்கா
பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் - அமெரிக்கா
தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
கலிபோர்னியா, அமெரிக்கா
தமிழர் நலன் மற்றும் மனித உரிமைகளுக்கான குழு
வோசிங்டன் டி.சி. அமெரிக்கா



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசத்தின் குரல் மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவால், நிகரற்ற ஆசானை இழந்து ஐ.பி.சி - தமிழ் துயருற்று நிற்கின்றது. மக்களை நேசித்து, மக்களுக்காக வாழ்ந்து, மக்களின் நினைவுடன் மண்ணுலகை விட்டுப் பிரிந்த எங்கள் அன்புக்கும், மேன் மதிப்பிற்கும் உரிய பாலா அண்ணை, கடந்த இரண்டு வருடங்களில் ஐ.பி.சி - தமிழ் எட்டிய வளர்ச்சிக்கு திரைமறைவில் நின்று அருள் புரிந்தவர்.

உண்மை, நேர்மை, நீதி, நடுநிலைமை என்பவை ஐ.பி.சி - தமிழின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்பது பாலா அண்ணையின் தீர்க்கமான பார்வையாக இருந்தது. பரப்புரை என்ற நோக்கில் உண்மையும் நேர்மையும் நீதியும் பிறழாத செய்திகளை வழங்கும் போது மட்டுமே, ஐ.பி.சி - தமிழ் மக்களிடையே நிலைத்து நிற்கும் என்பது பாலா அண்ணை வழங்கிய அறிவுரைகளின் சாரம்சம்.

ஐ.பி.சி - தமிழ் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் நயகத்தில் வசித்து வந்த பாலா அண்ணை, எமது வானொலியில் ஒலிபரப்பாகிய 'அலசல்' நிகழ்ச்சியை விரும்பிக் கேட்டார். மக்களிடையே பிரசித்தி பெற்ற ஊடகம் உங்கள் வானொலி என்பார் பாலா அண்ணை.

அதனால் தான் கடந்த இரண்டு வருடங்களில், பாலா அண்ணையின் அருள் எமக்குக் கிடைத்தது. செய்தியென்றால் பாலா அண்ணை ஓடி வரும் முதல் மூன்று ஊடகங்களில் ஒன்றாக நாம் இருந்தோம். பாலா அண்ணை இராஜதந்திர சந்திப்புக்களை மேற்கொண்டு விட்டு முதலில் தொடர்பெடுத்து செய்தி தரும் மூன்று ஊடகங்களில் ஒன்றாக ஐ.பி.சி - தமிழ் விளங்கியது. எமது பொறுப்பாளரையும் செய்தி ஆசிரியரையும் சந்திக்கும் போது பாலா அண்ணை கூறும் அறிவுரைகள், செய்திகளின் கனதி, நிகழ்ச்சிகளின் கவர்ச்சி, அரசியல் ஆய்வுகளின் வடிவம் ஆகியவை பற்றியே அமைந்தன.

பாலா அண்ணையை எமது வானொலியின் பணியாளர்களும் அறிவிப்பாளர்களும் ஆழமாக நேசித்தார்கள். பாலா அண்ணையும் அவர்களை நேசித்தார். நாம் எமது வருட விழாக்களை கொண்டாடிய கடந்த இரண்டு வருடங்களில் சிறப்பு அதிதியாக, தனது துணைவியார் அடேல் பாலசிங்கம் அவர்களுடன் பாலா அண்ணையும் பங்கு கொண்டார். நல்லதொரு அலுவலகத்தை வைத்திருக்கும் நீங்கள், ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார் பாலா அண்ணை.

உண்மையின் குரலாக ஐ.பி.சி - தமிழ் செயற்பட வேண்டும் என பாலா அண்ணை திரும்பத் திரும்ப வலியுறுத்துவார். அறிவுரை நாடிச் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நானிருக்கிறேன், கேட்டுத் தெளியுங்கள் என்று கூறி பாலா அண்ணை அறிவுரை நல்குவார்.

இன்று பாலா அண்ணை எங்களுடன் இல்லை. இரண்டு வருடங்களாக நாம் ஓடிச் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அறிவுரை புகட்டிய பாலா அண்ணை இப்போது தொலைதூரம் போய்விட்டார். ஆனாலும், பாலா அண்ணையின் வல்லமை எங்களை வலிமையாக ஆட்கொண்டு நிற்கின்றது.

தேசத்தின் குரலின் வல்லமையால் வலிமை பெற்று, மக்களின் உண்மைக் குரலாக என்றென்றும் ஐ.பி.சி - தமிழ் ஓங்கியொலிக்கும்.

**IBC**

"எடுத்த காரியம் யாவிலும் வெற்றி"
அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ்
இலண்டன்



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



Tamileelam Archive

**International Federation of Tamils**
18 Rue des Paquis,1201 Geneva, Switzerland
tel/Fax 00 41 22 7320 831 ift@bluewin.ch

The demise today of Mr.Anton Balasingham, the mentor of the Liberation Tigers of Tamil Eelam, has immersed the Tamil diaspora into deep sorrow and pain.

For thirty long years he dedicated himself to the Tamil liberation struggle against the cruel genocidal intent of Sinhala chauvinism. His death at a crucial juncture of the struggle gives us an unbearable shock.

An exponent of the Tamil liberation struggle, he has debated the Tamil cause on various international forums and led the peace negotiation team. He served as the guide that led the team to the Thimpu talks facilitated by India in 1985, a participant in the negotiations with Sri Lanka in 1989 and 1994, and as leader of the Tamil team that took part in the peace talks facilitated by Norway from 2002 onwards. The parting of this political and diplomatic expert who clearly understood how the Sinhala governments have been deceiving the Tamil people in a deliberate and planned manner, fills us with sorrow beyond words, particularly in view of the untold hardships imposed on us today by the brutal military offensives launched by the Sri Lankan armed forces.

It is widely known that he was the most important architect of the philosophical base of the Tamil freedom struggle and toiled with unquenchable yearning that it should be recognized by the international community, bridging the gap between the just prerogatives of the Tamil Eelam struggle and the expectations of the international community. As a philosopher he was a humanist, and a lover of literature.

We recall here that as a member of the Tamil diaspora this great man gave his best to the freedom struggle and has inspired thousands of Tamils abroad to follow his footsteps in contributing towards its success.

Till he breathed his last he held on to the lesson he had learnt from experience that the political freedom and security of the Tamils can be ensured only when the sovereignty of the Tamil nation is recognized by the Sinhala state and International community. The Tamil diaspora spread over countries like Europe, North America, Australasia and Africa esteem him as their voice and believe that their tribute to him is a genuine endeavour to make his dream come true.

At this time of bereavement, we express our heart-felt condolences to his wife Adel Balasingham.

(IFT is a confederation of Tamil Diaspora Organisations)



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





Tamileelam Archive

# TAMIL GUARDIAN

Bala Anna

A remarkable man, adored by the people he loved.

News that Mr. Anton Balasingham had passed away after a brief battle with cancer was met with shock and profound grief across the Tamil community. In the thirty years he was associated with the Tamil freedom struggle, he had truly become a legend in his own time. He was the LTTE's theoretician for thirty years and its chief negotiator for most of that time. In that period, a fledgling guerilla group dedicated to the emancipation of the Tamil people grew and expanded into a national liberation movement with a powerful military and an apparatus of civil administration, while Bala Anna became an icon of the Tamil cause.

Mr. Balasingham was many things to the Tamil struggle. The formal titles of theoretician and chief negotiator do not capture them all. Within the LTTE he was a father figure. His door was always open to cadres and commanders alike. No subject was taboo, confidentiality was assured. Most importantly, of course, he was the struggle's political strategist. Beyond the LTTE, he was approached for advice and guidance by a range of Tamils, from parliamentarians to journalists, supportive of the cause of freedom. He was eloquent in formal Tamil, but he could also address us in the colloquial, unraveling the complexities our struggle faced and bringing every one of us closer to it. Which is why his public addresses were so eagerly awaited.

## Bala Anna...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

It was Mr. Balasingham's demonstrably keen intellect and political acumen that compelled LTTE leader Vellupillai Pirapaharan to ask him in 1979 to join the tiny group of young revolutionaries their movement then was. (And it was Mr. Balasingham's recognition of Mr. Pirapaharan's abilities as a leader and the LTTE's institutional strengths that persuaded him to throw in his lot with the Tigers rather than any of the many other Tamil militant groups setting out on the long road of struggle.) The strength of the personal bond that grew between them is reflected in Mr. Pirapaharan's poignant words this week as he awarded Bala Anna that unique title 'Voice of the Nation.'

Nothing captures what Bala Anna meant to the Tamils as that title does. For three decades he spoke for us, the Tamil people. He led LTTE delegations in five attempts to negotiate a political solution with the Sinhala state. He represented us in our dialogue with the international community, both in public fora and private discussion. He explained the oppression we endure and defended our struggle for freedom. He was a formidable representative, aggressively and adeptly pursuing our interests. He could not be intimidated – though it was often tried. His razor sharp intellect was matched by a powerful personality.

But he was, as one commentator puts it, a quintessential negotiator. Amidst the heat of dispute he could find the sites of compromise. And, armed with the complete trust





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

of the LTTE leadership, he would compromise – but not surrender. Thus he earned the begrudging respect of his interlocutors, both Sinhala and international. His driving purpose was always the well being of his people, as all those who engaged with him from any side of the table quickly came to understand. It is entirely in character that his final public words in November, confirming his diagnosis with cancer, were mainly about the plight of the Tamil people. He loved us as much as we adored him.

It is inevitable that Mr. Balasingham's passing has brought joy to our enemies. Reflecting the character of some of them, there has been public jubilation at his death in parts of the south - just as when his illness was announced last month. This ugliness is characteristic of the oppression we fight.

It also reflects a misunderstanding of what Mr. Balasingham's multi-faceted role was, of where the LTTE now is as a movement and where the Tamils are as a nation. The growth of LTTE over the past three decades has been inexorable, despite the ferocious violence unleashed on it and the Tamil people by the Sri Lankan state and its allies. Mr. Balasingham contributed immeasurably to that growth. His analytical, calculative approach has been institutionalized. Every arm of the LTTE routinely weighs its decisions before committing to a course of action, the long-term benefit to the Tamil cause the overarching priority. As the LTTE's multi-faceted international engagement has grown in scale and complexity, new capabilities have emerged, both in the LTTE and wider Tamil nationalist movement. Mr. Balasingham guided many of these, devising strategies and advising key individuals. As deepening illness precluded a frontline role for Mr. Balasingham for much of this year, he was able to rest, secure his many tasks were being competently carried forward by others. The extent of his legacy will only be discernible in the fullness of time.

This newspaper and its staff are privileged to have had a very special relationship with Bala Anna. It began soon after he arrived in London in 1999. He readily agreed to meet the volunteers of the Tamil Guardian when we asked. Our discussions





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

quickly became regular and frequent. We always met at the study in his home, where we were warmly welcomed by him and his wife, Adele. An experienced journalist, Mr. Balasingham had a passion for media. He also appreciated that we were committed to articulating the Tamil cause. He spent considerable time with us in prolonged discussion on the ethnic question, on the Tamil struggle, on international affairs, and many other subjects. The depth of his knowledge was unfathomable. A warm, convivial and humorous man, he was a patient tutor. He scrutinized our work and was generous with his praise and scathing in his criticism. Yet he never constrained us, encouraging us to write freely on the Tamil cause. As with a handful of other Tamil correspondents, he took us into his confidence in exchange for our discretion. In March 2000 we were privileged to be exclusively granted his first media interview after leaving Vanni. He gave many of his infrequent subsequent interviews to us.

Our relationship with the Balasinghams went beyond the production of the newspaper. It was individual, personal and very affectionate. They took an active interest in each of us, inquiring of those who met them about those who were not there. Bala Anna encouraged us to develop our individual interests and offered welcome advice on our academic and professional pursuits. We drew much inspiration and not a little courage from him. Being close to Bala Anna, we were, for a long time, acutely aware of his health difficulties. His health declined rapidly this year, but only until recently were we unable to converse regularly with him. His death comes as a devastating personal loss to each of us. Our hearts go out to Adele Aunty, his beloved wife and constant companion. Her loss is the deepest. We will all miss him very much. We, at the Tamil Guardian, couldn't be more proud of our close association with Mr. Balasingham over the past seven years. He was, quite simply, a remarkable man.


**- Tamil Guradian Staff**





தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


Tamileelam Archive



Tamileelam Archive